[illegible]

மலர் 1 இதழ் 4

[illegible] 1928

JL
R673 8m211, N28
N28·1·4.
187119

Registered No. M. 2330.

ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


| மலர் க | பிரபவ ஆண்டு பங்குனித் திங்கள்<br>1928 ஆம் ஏப்ரல் மீ | இதழ் ச |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்


| | | |
|---|---|---|
| ஜகத்குரு யார் | ... பத்திராசிரியர் ... ... | 73 |
| புலால் மறுத்தலுக்கு 50 காரணங்கள் | ... C. S. சாமிநாத முதலியார் B.A. | 76 |
| சர்வமத சம்மதம் | ... A. வரதஞ்சய பிள்ளை ... | 82 |
| சம நிலை | ... வள்ளை-பாலசுப்பிரமணியன், B.A. | 88 |



பத்திராசிரியர்
மணி. திருநாவுக்கரசு முதலியார்,
ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்



உதவிப் பத்திராசிரியர்
வித்துவான்
பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்



சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,
92, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை.


OFFICE OF THE REG
23MAY
MADRA

# அறிக்கை

"சித்தாந்தம்" பத்திரிகை மீண்டும் வெளிவந்ததைப் பாராட்டி நாடோறும் பல கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. அவைகளுக்குத் தனித் தனியே பதில் விடுக்க இயலவில்லை. பல அன்பர்கள் பற்பல நண்பர்களை அங்கத்தினராகச் சேர்த்துச் சந்தாக்களையும் முன்பணமாக வசூலித்துச் சமாஜ ஆபீசுக்கு அனுப்பி வருகிறார்கள். அத்தகைய பெரும் புண்ணிய சீலர்கட்கு இச்சமாஜம் எஞ்ஞான்றும் நன்றியுடையதாகும். அவர்களைப் போல் ஏனைய அங்கத்தவரும் தங்கள் சந்தாவை இவ்வறிக்கை கண்டவுடன் காரியதரிசி விலாசத்துக்குச் செலுத்துவதோடு பல அங்கத்தினரைச் சேர்த்து அவர்கள் சந்தாக்களையும் முன்பணமாக அனுப்பிச் சிவ புண்ணியத்தில் ஈடுபடுவார்களென எதிர் பார்க்கிறோம். ஆயுள் அங்கத்தவரைச் சேர்த்தல், வர்த்தக விளம்பரங்களைப் பத்திரிகைக்கு அனுப்புதல் முதலிய சிறந்த பொருளுதவிபுரிதல் பெரிதும் சிறப்புடையது. சமாஜத்தின் பல நோக்கங்களும் இனிது கைகூடுமாறு பொருளுதவி புரிந்து சமாஜத்தினருக்கு உவகையும் ஊக்கமும் அளித்து சமாஜத் தொண்டுகள் பலவும் செவ்வனே நடைபெறுமாறு செய்தல் சைவர்களின் முதற்கடமையென அறிவிக்கவும் வேண்டுமோ?

அடுத்த மாதம் முதல்தேதிக்குள் சந்தாவை அனுப்பாத அங்கத்தினருக்கு அடுத்த இதழ் வி. பி. தபால் மூலம் அனுப்பப்படும். அதனால் சந்தாதாரர்கள் ரிஜிஸ்திரேஷன் செலவை அநாவசியமாகக் கொடுக்க நேரிடுமென்று அறிவிக்கலாயிற்று.

ம. பாலசுப்பிரமணியன்,

காரியதரிசி.

ஓம்

# சித்தாந்தம்

“எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே”

| மலர் ௧ | பிரபவ ஆண்டு பங்குனித் திங்கள்<br>1928 ௵ ஏப்ரல் ௴ | இதழ் ௪ |
|---|---|---|

## ஜகத்குரு யார்

[பத்திராசிரியர்]

ஜகத்குரு என்னும் சொற்றொடர் உலகத்திலுள்ள மக்கள் எல்லாருக்கும் ஆசிரியர் என்னும் பொருளைத் தரும். உலகம் என்பது ஆசியா, ஐரோப்பா முதலான ஐம்பெருங் கண்டங்களும் ஆகும். உலகம் என்னும் சொல் ஒரு பேரிடத்தையும் ‘வருணன் மேய தீம் புனல் உலகமும்’ என்புழிப் போலக் குறித்தலும் உண்டு. அன்றியும் ஒரு திறப்பட்ட மக்கட் கூட்டத்தாரையும் அஃது உணர்த்தும். சைவ உலகம் என்றால் எவ்விடத்தும் உள்ள சைவ சமயத்தாராகிய ஒரு பெருங் கூட்டத்தாரை அஃது உணர்த்தல் காண்க. ஜகத்குரு என்னும் புனைப்பெயரால் ஆதி சங்காராசாரியர் சிலரால் வழங்கப்படுகின்றார். அவருக்கு அப்பெயர் மேலே குறிப்பிட்ட எப்பொருளிலே வழங்கப்படுகின்றதெனத் தெரியவில்லை. ஜகம் என்னும் வடமொழி மேற்காட்டப்பட்ட முப்பொருள்களிலும் தமிழில் வழங்குவதாகத் தெரியவில்லை. அது நிலப்பரப்பு ஒன்றைமட்டும் குறிப்பதாக உள்ளது. இங்ஙனம் உலகம் முழுவதையும் எடுத்துப் பார்ப்போமானால் சங்கராசாரியருக்கு ஜகத்குரு என்னும் பெயர் பொருந்தாது. ஓரிடத்தை மட்டும் குறிப்பதாகக் கொண்டாலும் அவருக்கு அப்பட்டம் ஏலாது. ஒரு கூட்டத்தாரை மட்டும் ஜகம் குறிப்பதாயின் அஃது ஒருவாறு இசையும். எங்ஙனமெனில், ஸ்மார்த்தப் பிராமணராகிய ஒரு சிறு கூட்டத்தார் அவரைக் குருவாகக் கொண்டாடி வருவதனாலும் அவர் கொள்கைகள் எல்லாம் அம்மதத்தினருக்கு உடன்பாடாக இருத்தலினாலும் என்பது. இப்பட்டம் சங்காராசாரியருக்கு யார் சூட்டியதோ நாம் அறியோம். அஃது அவர் உயிருடனிருந்த காலத்திலே அவருக்கு வழங்கியிராது. வழங்கியிருந்தால் அவர் அதனை மறுத்திருத்தலும் கூடும். மறுப்

பின்னும் போற்றும் மக்கள் மீண்டும் மீண்டும் அதனைக் கூறும் வழக்கமும் உடையராவர். ஸ்ரீ இராமலிங்க சுவாமிகட்குத் திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் என்ற பட்டத்தை எழுதிக்கொண்டுவந்து காட்டிய மாணக்கருக்கு அவர் 'திருவருட் பிரகாச வள்ளல் ஆர் என்னும் இராமலிங்கம்' என்று கூறி அதுவே அத்தொடருக்குப் பொருளாயின் தமக்குப் பொருந்துமென்றும் ஆனால் அத்தொடருக்கு உரிய பொருளாவான் சிவபெருமானே என்றும் கூறி மறுப்பவும், மாணக்கர் வலிசெய்து அப்பட்டத்தை நுழைத்து விட்டனர் என்றும் கதை கேட்கப்படுகிறது. இது போன்றே இன்றும் மஹாத்மா என்னும் சிறப்புப் பெயர் வேண்டாமெனக் காந்தியடிகள் பன்முறை கூறியும் எழுதியும் மறுப்பவும் அவருடைய போற்றிகள் வற்புறுத்தி மஹாத்மா என்றே அவரைப் பேசியும் எழுதியும் வருகின்றனர். அதன் பொருட்டு அவர் வெளிப்படையாகத் தமது வருத்தத்தை வரைந்துள்ளார். இவ்வாறே சங்கராசாரியருக்கும் நிகழ்ந்திருக்கலாம்.

உலகத்திலே சைவம், வைணவம், ஸ்மார்த்தம், மாத்துவம், சமணம், பௌத்திகம், இஸ்லாம், கிறித்துவம் முதலான பலப்பல சமயங்கள் உள. அவைகட்கெல்லாம் தனித்தனி ஆசாரியர்கள் உளர். ஒரு சமயாசாரியரை மற்றொரு சமயம் எவ்வாற்றானும் ஒப்புக் கொள்ளுவதில்லை. இங்ஙனம் உண்மை இருப்ப, சங்கராசாரியரை ஜகத்குருவென வழங்கி மகிழ்தல் ஸ்மார்த்தர் அவாப் பெருக்கையே காட்டுகிறது. ஆசை வெட்க மறியாதல்லவா? அவரை [illegible] பகர் என்றும் அ[illegible] கூறிக்கொள்[illegible]னர். அதுவும் பொருள் நிரம்பா வெற்றுரையே யாகும். ஒரு மதத்தை சங்கரர் நிலை நிறுத்தினாரே அன்றி ஆறு மதங்களையும் அவர் நிலை நிறுத்தினாரில்லை. இத்தகைய பட்டங்களை அவ்வக் கூட்டத்தார் தம்தம் ஆசாரியர்கட்குச் சூட்டி மகிழ்க. அதுபற்றி எமக்குக் கவலை யில்லை. ஆனால் சைவர் இம்மாயங்களால் மயங்கி விடலாகாது. இவையிற்றின் உண்மை இற்றெனத் தெரிந்து கோடல் வேண்டும். இவ்வகையில் பிராமணர்கள் அறிவுடையவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் பிராமணர் அல்லாதாரில் வைணவரும் சைவரும் ஸ்மார்த்த குருவாகிய சங்கராசாரியரைத் தமது குருவெனப் பிறழவுணர்ந்து அவரைப் பாராட்டுதலுடன் அமையாது அவர் பெயரால் வழங்கப் பெறும் மடாதிபதிகளையும் அவரைப் போலவே பாவித்துப் பாத காணிக்கைகளை அவருக்கு வைத்துத் தொழுதும் வாழ்த்தியும் வருகின்றனர்.

சைவ சமயத்துக்கும் ஸ்மார்த்த சமயத்துக்கும் எவ்வாற்றானும் ஒற்றுமையின்று. வைணவத்துக்கும் சைவத்துக்கும் உள்ள ஒற்றுமையும் ஸ்மார்த்தத்துக்கும் சைவத்துக்கும் இல்லை. சைவர் கொள்கைகள் வேறு; ஸ்மார்த்தர் கொள்கைகள் வேறு. சைவர் ஒழுக்கம் வேறு; ஸ்மார்த்தர் ஒழுக்கம் வேறு. இத்துணை வேற்றுமையுள்ள ஸ்மார்த்த சமய குருவாகிய ஆதி சங்கராசாரியரே சைவருக்குப் புறச்சமயத்தார் என்றால் இப்பொழுது அவர் பெயரை வைத்துக் கொண்டிருக்கும் மடாதிபதிகள் சைவர் வழிபடும் ஆசாரியர் ஆதல் யாங்ஙனம்? இதனை ஏன் சைவர் அறிந்திலர்? வெளித் தோற்றத்தால் ஸ்மார்த்தர் சைவரைப் போல இருத்தலே அதற்கோர் காரணமாகலாம். ஸ்மார்த்தர் பூசுவது திருநீறு, பேசுவது பஜகோவிந்தம்; தரிப்பது உருத்திராக்கம், உரைப்பது மித்யா வாதம்.

பொதுவாகச் சங்கர மதத்தினர் அத்வைதிகளென்றும் வேதாந்திகள் என்றும் தம்மைக் கூறிக்கொள்ளுகின்றனர். அத்வைதிகள் என்னும் சொல் சிறப்பாக அவரை மட்டும் குறிக்காது; அது சைவ சித்தாந்திகளையும் வைணவர்களையும் கூடக் குறிக்கும் பொது மொழியே ஆகும். அவ்வாறே வேதாந்தம் என்னும் சொல்லும் அவருக்குச் சிறப்புப் பெயராக மாட்டாது. சங்கர மதத்தினர்க்கு ஏகான்ம வாதிகள் என்பதே சிறப்புப் பெயராகும். சைவர் ஸ்மார்த்த குருவாகிய மடாதிபதியைத் தமது ஆசாரியரோடு ஒப்பக்கொள்ளுதலும் பாராட்டுதலும் பெரும்பிழை என்பதை உணர்வார்களாக.

சங்கராசாரியருக்குப் பாதகாணிக்கை செலுத்தி வந்தனை வழிபாடு புரிந்த நண்பர் சிலர் தாம் பரனிச்சையாக அவற்றைப் புரிந்ததாகக் கூறினர். தம்முடைய நியாய வாதியை மகிழ்விக்கும்படி செய்ததாக ஒரு சிலரும், பிராமண நண்பர் தூண்டுதலினால் வேறு சிலரும் அவ்வாறு செய்துவிட்டதாகக் கூறி வருந்தினர். இக்கோழைகட்கு நாம் யாது சொல்ல இயலும்? பிராமணர் சங்கராசாரியரை மற்றவர் வணங்குதற்கு இத்துணை முயற்சி ஏன் செய்கின்றனர்? பிராமணர் அல்லாதார் வீடுபேற்றை அடைய வேண்டுமென்றா? இல்லை; இல்லை. தமது மதத்தை வளர்ப்பதற்கும் தமது குலத்தைச் சிறப்பிப்பதற்குமே யாகும். மடத்திற் சேரும் பொருள் பிராமணர் வயிற்றை நன்று வளர்ப்பதற்கும் பிராமணத்துவத்தை என்றும் நிலை நாட்டுதற்கும் செலவழிக்கப்படுகின்றது.

இப்போதுள்ள கும்பகோணம் சங்கராசாரியர் தமக்குப் பொருள் வழங்கிய பிராமணரல்லாதாரைப் புறக்கணித்து அவமதித்ததாகவும் அவர்கட்கு விபூதிப் பிரசாதம் நேரே வழங்குதற்கும் இசைய வில்லை யென்றும் பத்திரிகை வாயிலாகத் தெரிந்து பெரிதும் வருந்தினோம். இம்மடாதிபதியும் வைணவ ஜீயர்களும் நகர்தோறும் ஊர்தோறும் வைதிக ஆடம்பரத்துடன் சென்று ஏழைகளிடத்தும் செல்வரிடத்தும் பெரும்பொருள் பறிக்கின்றனர். போகும் இடங்களிலெல்லாம் பிராமண சந்தர்ப்பணையே நடக்கின்றது. ஏழை எளியவர்கட்கு ஒரு கவளமும் கிடையாது. இவர்களோ, பெருந்தோசை, வடை, பாயசம், பழம் முதலானவைகளுடன் சம்பிரமாகச் சாப்பிட்டு விட்டுக் களிக்கின்றனர். பொருளோ பெரும்பாலும் பிறருடையது. இஃதென்ன தருமம்! சமயப் பிரசாரம்!

இனி, சைவர் பலர் ஸ்மார்த்தரைக் கொண்டு தங்கள் சுபாசுபங்களை நடத்துவிக்கின்றனர். சைவருக்கும் ஸ்மார்த்தருக்கும் பேதம் பெரிதென்று மேற்கூறினோம். இங்ஙனமாகவும் சைவர் ஸ்மார்த்தரைக்கொண்டு சுபாசுபங்களை நடத்துவிக்கலாமா? மந்திரம், தந்திரம், கிரியை முதலிய எல்லாவற்றாலும் சைவர் ஸ்மார்த்தருக்கு வேறானவர். சைவர் ஆதி சைவராகிய குருக்களையாதல் அல்லது சைவ ஓதுவார்களையாதல் கொண்டு தமது சுபாசுபங்களை நடத்துவித்தல் வேண்டும். இங்ஙனம் தலை தடுமாற்றமாகச் சமய கிரியைகளைச் செய்விப்பதினும் வாளா விடுத்தல் சாலவும் நன்றன்றே!

சைவ மடங்கள் ஏன் இத்தகைய பிரசார வேலைகளைச் செய்யலாகாது? சைவ



18719 18714 சென்னை-600 ...

கிரியைகளைக் கற்பிக்கப் பாடசாலை ஒன்றை ஏற்படுத்தலாகாதா? திருவாவடுதுறை மடாதிபதியும் தருமபுர மடாதிபதியும் நினைத்தால் இன்றே இதற்கென ஒரு பாடசாலையை அமைத்து விடலாம். பிரசாரகர்களை ஆங்காங்கனுப்பி, மக்கட்குச் சமய அறிவை ஊட்டலாம். கிறித்தவசமயத்தார் சமய அமைப்பும் அனுட்டான முறைகளும் பிரசார வேலைகளும் எத்துணை அழகாக உள்ளன! நமக்குத் தானே அறிவு தோன்றாவிட்டாலும் பிறரைப் பார்த்தேனும் நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?

அந்தோ! சைவர் நிலை வருந்தற்பாலது! சைவருள் எத்தனை பேர் இன்றும் புரட்டாசித் திங்கட் சனிக்கிழமைதோறும் திருநாமஞ் சாத்திக்கொள்கின்றனர்? எத்தனை பேர் வைணவப் பெயர்களைத் தம்மக்கட்குச் சூட்டுபவர்! எத்தனை பேர் அல்லாப் பண்டிகையில் நூலைத் தரித்துக்கொள்வோர்! எத்தனை பேர் மகம்மதியசமாதியை வணங்கி வழிபடுவோர்! எத்தனை பேர் பள்ளிவாயிலிலே பிள்ளைகளோடு காத்துக் கிடப்போர்! எத்தனை பேர் கிறித்தவக் கோயிலிலே மிளகு மந்திரிக்கக் கொடுப்பவர்! எத்தனை பேர் புழைக்கடை முனியனுக்குப் பூசை போடுவோர்! எத்தனை பேர் சங்கிலிக் கருப்பனைத் தப்பாது ஏத்துவோர்! எத்தனை பேர் காடேறி முதலிய சிறு தெய்வ வழிபாடு புரிவோர்!

இக்கேட்டிற் கெல்லாம் மூலகாரணம் அறியாமையேயாம். இதனை அடியோடு தொலைக்க முயல்வதே சைவராவார் முதற் கடமை. அதன் பொருட்டு எவ்வெவ் வகையாற் பாடுபட வேண்டுமோ அவ்வவ் வகையில் உழைக்கச் சைவர் முன் வருவாரோ?

---

# புலால் மறுத்தலுக்கு 50 காரணங்கள்

[C. S. சாமிநாத முதலியார், B. A.]

(1) திருவள்ளுவர், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள், கிறிஸ்துநாதர், புத்தர், பித்தகாரஸ், சாக்ரடிஸ், ஜொராவாஸ்டர், பெஞ்சாமின் பிராங்கலின், ஷெல்லி முதலியவர்களைப் போன்ற என்றும் மறக்கப்படாத புகழ்பெற்ற பெரியோர்கள் அநேகர் மரக்கறி உணவைத் தான் மனிதர்கள் உண்ணவேண்டுமென்று மிகக் கண்டிப்பாய்க் கூறியிருக்கிறார்கள்.

(2) மனிதக் கொலையைத் தடுப்பது சாதாரண மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டம். அது இல்லையானால், அநேகர் தாராளமாய் அக்காரியத்தைத் துணிந்து செய்வார்கள். மாமிச உணவுக்காக மனிதர்கள் துணிந்து ஆடுமாடு முதலிய பிராணிகளைக் கொல்லும் வழக்கத்தை மனிதச் சட்டம் தடுக்காவிட்டாலும் அன்பு என்னும் ஈஸ்வரச் சட்டம் தடுக்கிறது.

(2) 'அன்பே சிவம்' என்று திருமூலர் கூறியிருக்கின்றார். அன்பின் வழியே ஈஸ்வர வழிபாடு. மாமிச உணவு அன்புக்கு முரண்பட்டது. ஆகையால் அது ஈஸ்வர வழிபாட்டுக்கு விரோதமானது.

(4) மேற்சொன்ன மந்திரத்தைப் போன்ற பெரியோரது வாக்கியங்களில் நம்பிக்கை வைக்கிறவர்கள், மாமிசம் உண்ணும்போது சுவவஞ்சகம் செய்கிறார்கள். அவர்கள் தேகத்திலுள்ள ஐந்து பூதங்களும் உள்ளே நகைக்கும்.



(5) கவிகள், சித்திர வேலைக்காரர்கள், சங்கீத வித்துவான்கள் முதலியவர்கள், அழகின் வழியே ஈஸ்வரனையடைய உதவி செய்கிறார்கள். மாமிசம் உண்ணும் வழக்கம் அழகுக்கு மாறானது. கொல்லுஞ் சமயத்தில் கொல்லப்படும் பிராணிகளின் நிலைமையும், கொல்லுகிறவர்கள் நிலைமையும், அச்செயல் நடைபெறும் இடத்தின் நிலைமையும், மாமிசம் விற்கும் இடத்தின் நிலைமையும் அழகுக்கு நேர் விரோதமானவை.

(6) ஈஸ்வரன் ஆனந்த மயமானவர். எல்லாரும் இன்பத்தைத்தான் தேடுகிறார்கள். மாமிச உணவைக் கொள்ளுதல் பல முறையில் துன்பம் இழைக்கும் வழி. அதில் ஈடுபட்டவர்கள் பிறருக்குந் துன்பம் விளைத்து அதனால் தங்களுக்குந் துன்பத்தை வருவித்துக் கொள்ளுகிறார்கள்.

(7) கிறிஸ்துவ தேசங்களில் நாள் ஒன்றுக்கு 10 இலட்சம் ஆடு மாடுகள் கொல்லப் படுகின்றனவாம். சிட்னி எச். பியேர்டு என்பவர் ஓர் ஆங்கிலப் புத்தகத்தில் அவ்வாறு கூறுகின்றார். சென்னை நகராமுனிசிபல் கணக்குப்படி சென்ற சில வருஷங்களில் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி நடத்தும் ஒரு கொலைக் களத்தில் மாத்திரம் கொல்லப்பட்ட ஜந்துக்களின் கணக்கு பின்வருமாறு:—

| | | 1922 | 1923 | 1924 | 1925 |
|---|---|---|---|---|---|
| ஆடுகள் | ... | 4,04,555 | 3,83,991 | 4,06,672 | 4,03,507 |
| மாடுகள் | ... | 18,245 | 16,761 | 18,114 | 18,588 |
| பன்றிகள் | ... | 1,317 | 1,251 | 1,348 | 1,300 |

தங்களால் உண்டாகும் இம்சையின் அளவை மாமிசம் உண்பவர்கள் கவனித்தால், அதை விட்டுவிட வேண்டுமென்றே தோன்றும்.

(8) இயற்கையில் காண்கின்ற விகாச முறைப்படி பார்த்தால், செடி கொடி மரங்கள் அடுத்த மேற்படிக்கு அதாவது பட்சிகள் நாற்கால் பிராணிகள் முதலிய வர்க்கத்துக்கு ஏறிப்போக வேண்டியவை யென்பதும், ஆடுமாடு முதலிய பிராணிகள் மானிட வர்க்கத்தை நாளடைவில் அநேக ஜென்மங்களுக்குப்பின் அடைய வேண்டியவை யென்பதும் ஈஸ்வரனது இயற்கை யருளாகும் என்று ஏற்படுகிறது. அதுவே நமது சாஸ்திரத்துக்கும் பொருத்தமா யிருக்கிறது. அந்த ஆக்ஞைக்குத் தக்கவாறு நாம் ஒழுகவேண்டும்.

(9) ஆடுமாடு முதலிய பிராணிகள் நமது இளைய சகோதரர்கள், நம்முடைய அன்பை அவைகட்குச் செலுத்தி அவைகள் மேன்மை அடையுமாறு நாம் உதவி புரிவதற்காக உலக மாதா நம்மிடம் அவைகளை ஒப்புவித்திருக்கிறார்கள். அவைகளும் நாமும் ஓரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ஞாபக மிருக்க வேண்டும்.

(10) செடி கொடி மரங்களின் உயிர்களைப் போக்காமலே கூட எவ்வளவோ மரக்கறி உணவை நாம் பெற்றுக் கொள்ளலாம். அவைகளை வேரோடு எடுத்து விட்டாலும் மறுபடியும் புதுச் செடி கொடி மரங்களை உண்டாக்கல் நமக்குச் சுலபமாகிறது. ஆடுமாடு முதலிய ஜந்துக்களின் உயிர்களைப் போக்கி விட்டால் அவ்வாறு செய்ய முடியாது.

(11) ஈஸ்வரன் நன்மையின் உருவம். பிராணிகளுக்குத் துன்பம் விளைக்கும் வழக்கங்கள் நம்மிடமிருக்கு மளவும் ஈஸ்வரனிடம் நாம் நெருங்க முடியாது.

(12) கெட்ட கருமத்துக்குக் கெட்ட பலன் என்கிற கருமச் சட்டத்தில் வாயில்லாப் பிராணிகளுக்கு மனிதர் புரியும் துன்பங்கள் விலக்காக மாட்டா.

(13) பயிரிடுதல், வண்டி யிழுத்தல் முதலிய அநேக வேலைகளுக்கு உபயோகமாயிருத்தலுமன்றி, இனிய உணவாகிய பாலுங் கொடுத்துவரும் ஆடு மாடுகளை உணவுக்காக நாம் கொல்லுதல் நன்றி மறத்தல் என்னும் பெரும் பாவத்தைச் சாரும்.

(14) நம்பினவர்களை மோசஞ் செய்தல் என்னும் குற்றமும் ஜீவ கொலையில் நம்மைச் சாருகின்றது.

(15) மனிதர்களுக்குச் சுகதுக்க நுகர்ச்சி இருப்பதுபோல் ஆடு மாடு முதலிய பிராணிகளுக்கும் இருக்கின்றது. செடி கொடி மரங்களுக்கும் உயிர் இருக்கின்றதாயினும், சுகதுக்க நுகர்ச்சி மிகக் குறைவு.

(16) வாயில்லாப் பிராணிகளைக் கொலை செய்வதை மனிதன் நிறுத்தினால், கொலையென்னும் பாபச் செயலுக்ுக் காரணமான கெட்ட எண்ணம் உலகத்தில் குறையும். அதனால் மனிதர்களின் கொலைக்குக் காரணமான சண்டைகளும் குறையும். அப்போது உலகத்திலுள்ள தேசங்களின் சாந்திக் கூட்டமாகிய ஐக்கிய மகாநாட்டின் (League of nations) நோக்கம் நிறைவேறுதற்கு இடமுண்டு.

(17) மாமிச உண்வுக்கும் கோபம் போன்ற கடுமையான உணர்ச்சிக்கும் சம்பந்த முண்டு. சிட்னி எச். பியேர்டு என்பவர் இதை ஓர் ஆங்கிலப் புத்தகத்தில் தெளிவாக விளக்கியிருக்கிறார். மாமிச உணவு ஈரலில் தொந்தரவு உண்டாக்குகிறது. இதனால் மனிதருக்குக் கடுங்கோபம் உண்டாகிறது என்று உதாரணம் கூறுகிறார்.

(18) வேறொரு ஆலோசனை யின்றி மாமிச உணவு மிக உருசியானது என்று நினைத்து, அதை உட்கொள்ளுகிறார்கள். நல்ல பழங்கள், காய் வர்க்கங்கள் தானியங்கள் இவைகளை விட அது உருசியுடைய தன்று. அப்படியே யிருப்பதாக வைத்துக் கொண்டாலும், மற்றக் கெடுதல்களை நோக்காமலே மாமிச உணவில் ஆசை வைத்தலானது, நாக்கு என்னும் இந்திரியத்துக்கு நாம் அடிமை யென்பதை வெளியிடுகிறது. இந்திரிய நிக்கிரகமின்றிச் சீவனுக்கு நற்கதியுண்டோ?

(19) மாமிச உணவு சிலாக்கியமானது என்று நம்பாதவர்கள்கூடப் பழக்கம் என்னும் கொடுமைக்கு அடிமையாய் அதை உண்கிறார்கள். கெட்ட பழக்கம் போல் நல்ல பழக்கமும் ஆரம்பத்தில் கடுமையாயினும் பின்னர்ச் சுலபமாகும். கஷ்டத்தைப் பாராமல் கெட்ட அப்பியாசங்களை விட்டு விடுவதே மானிடத் தன்மைக்கு ஏற்ற தாகும்.

(20) சுபாவத்தில் குழந்தைகளுக்கு மாமிச உணவில் ஆசை கிடையாது. ஆகையால் அது இயற்கைக்கு விரோதம். பெற்றோர்களின் வற்புறுத்தலால் தான் அப்பழக்கம் பின் உண்டாகி விடுகிறது.

(21) நமது வீட்டிலுள்ள குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்கள் உண்டாக வேண்டுமென்ற ஆசை யிருந்தால் நாம் அம்மாதிரி நடந்து காண்பித்தல் வேண்டும். ஆகையால் மாமிசம் உண்பவர்கள் தங்கள் சிரமத்தைப் பாராமல் தத்தம் குழந்தைகளின் நன்மையை உத்தேசித்தாவது அந்தத் துர்ப்பழக்கத்தை விட்டுவிட வேண்டும்.



(22) கசாப்புக்காரர்கள் பிராணிகளின் துன்பத்தைக் கவனியாமலே அவர்கள் இஷ்டப்படி கொல்லுகிறார்கள். அதனால், வன்னெஞ்சம் உடையவர்களாகிய அவர்கள் ஆண்டவன் கருணைக்குப் புறம்பாகிறார்கள்.

(23) பிராணிகளைக் கொல்வதும் புலால் விற்பதும் கஷ்டமும் கொடுமையும் பாபமுங் கூடிய தொழில்களாகையால் அத்தொழில்களில் தங்கள் சகோதரர்களை மாமிசம் உண்பவர்கள் அமர்த்தி வைக்கிறது பெரும் பாவமாகும்.

(24) தினந்தோறும் கொடுமையான தொழில் செய்யும் பயிற்சினால் கசாப்புக்காரர்கள் மனிதர்களிடமும் கொடுங் குற்றங்களை, மற்றத் தொழிலாளிகளை விட, அதிகமாகச் செய்கிறார்கள் என்ற உண்மை, மேல்நாட்டில் சிக்காகோ முதலிய இடங்களில் கணக்கெடுக்கப்பட்டதிலிருந்து தெரிகிறது.

(25) புகை வண்டிகளிலும் கப்பல்களிலும் போகும்போது பிராணிகள் மிகத் துன்பம் அடைகின்றன. கொலை செய்யப்படும் இடத்துக்குப் போய்ச் சேருவதற்கு முன்னரே பிராணிகள் எமவாதனைப்படுகின்றன.

(26) சுயராஜ்ய வாழ்க்கைக்கு ஆசைப்படும் மனிதர்கள் தங்களுக்குக் கீழான ஜீவர்களுக்குக் கூடிய மட்டும் சுயராஜ்யம் கொடுத்தால் தானே, இவர்களுடைய அவாவுக்குக் கடவுளுடைய கடாட்சம் கிடைக்கும்.

(27) மனிதனுடைய தேகத்திலுள்ள அவயவங்களின் கூறு, (பற்கள் ஜீரண உறுப்புக்கள்) முதலிய பாகு பாட்டைப் பரிசீலனை செய்யும் வழியில் காணப்படுவது யாதெனில், இயற்கையில் மரக்கறி உணவைக் கொள்ளத்தக்கது மனித சரீரம் என்பதே. ஆசிரியர் வில்லியம் லாரன்ஸ் எப். ஆர். எஸ். என்பவர் இங்கிலாந்தில் சர்ஜன்களின் இராயல் கலாசாலையில் செய்த ஓர் உபன்னியாசத்தில் இதை விளக்கினார்.

(28) மாமிச உணவு நெடு நாளாய் அதிக பழக்கத்தி லிருக்கும் மேனாடுகளில் உள்ள அநேக அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியாலும் அநுபவத்தாலும் மரக்கறி உணவுதான் தேக ஆரோக்கியத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் மனிதர் கொள்ளத்தக்கதென்று சமீபகாலத்தில் மெய்ப்பித்துப் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் எழுதியிருக்கிறார்கள்.

(29) தியானம், தவம் முதலிய வழிகளில் இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கத் தேகம் இடையூறில்லாமலிருப்பதற்கு மரக்கறி உணவுதான் அவசியமென்பதைப் பண்டைய சாஸ்திரங்களும் வற்புறுத்துகின்றன.

(30) கிறிஸ்துவ பாதிரிகள் ஆராய்ச்சியினாலும் தெரிகிறது என்னவெனில், கல்விப் பயிற்சிக்கு மரக்கறி உணவைப் போல் மாமிச உணவு அவ்வளவு அநுகூலமன்றென்று ஏற்படுவதேயாகும். நீக்ரோ ஜாதிச் சிறுவர்களிடம் கல்விப் பயிற்சி சம்பந்தமாகச் செய்த ஆராய்ச்சியின் முடிபாக ஒரு பாதிரியார் மேற்சொன்னவாறு கூறியிருக்கிறார்.

(31) மந்த புத்தியும் குரூரகுணமும் உள்ள ஜந்துக்களின் மாமிசம், அதைச் சாப்பிடும் மனிதர்களுக்கு அக்குணங்களைக் கொஞ்சமாவது கொடுக்காமலிராது.

(32) மாமிச உணவினால் அதிக தேகப் பெருக்கும் சோம்பலும் உண்டாகின்றன.

(33 நன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மரக்கறி உணவையும் அதே எடையுள்ள மாமிச உணவையும் ஒத்திட்டுப் பார்த்தால், பலமும் ஆரோக்கியமும் கொடுக்கும் சக்தில் மரக்கறி உணவே மேலானதாகத் தெரிகிறது. இதை சர். பெஞ்சாமின் ரிச்சர்ட்சன் என்னும் டாக்டர் ஒரு புத்தகத்தில் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

(34) சூரிய ஒளியிலிருந்து தான் பூமியில் எல்லா ஜீவசக்தியும் விளங்குகிறது. அதுவே மூலாதாரம். செடிகளும் மரங்களும் அந்தச் சூரிய சக்தியை நிரம்ப உட்கொண்டிருக்கின்றன. ஆகையால் மரக்கறி உணவில் இயற்கையினால் மேலான சக்தி அமைக்கப்பட்டிருக்கின்றது.

(35) ஜீவன்களில் உற்பத்தியாகும் உணவு ஒன்று, மாமிசத்தில் சம்பந்தமான எவ்வகைக் கெடுதியுமில்லாமல் மனிதர்கட்குப் பெரிதும் உபயோகமாகிறது. அதாவது பால், ஜீவிய உணவு அளிக்கக் கூடிய சக்தி அதிலேயே கிடைக்கிறது. வாதுமை, துவரம் பருப்பு, நிலக்கடலை, பட்டாணி, அவரை முதலிய அநேக மரக்கறிப் பொருள்கள் மாமிச உணவிலுள்ள சக்தியை அடக்கிக்கொண் டிருக்கின்றன. ஆகையால் ஜீவிய உணவுக்காக ஜீவன்களைக் கொன்று மாமிசம் சேகரித்தல் முற்றிலும் அசம்பாவிதமாம்.

(36) சரியான ஆராய்ச்சியின் முடிவாகப் பார்த்தால் சாதாரணமாய் மரக்கறி உணவு மாமிசத்தை விட விலை குறைந்ததே. அரிசியில் சத்துள்ள பாகமாகிய தவிட்டை வீணாக்கி விட்டு, கேழ்வரகு முதலிய பலமுள்ள நயமான தானியங்களை உண்ணும் வழக்கத்தையும் கைவிட்டு, சத்துக்காக மாமிசம் வேண்டியிருக்கிறதென்றும், பருப்பு முதலிய பொருள்களைவிட மாமிசம் விலை குறைந்ததென்றும், ஆகையால் அதைக் கொள்ளவேண்டியிருக்கிறதென்றும் சிலர் அறிவீனமாக நினைக்கிறார்கள். சில காலங்களில் சில இடங்களில் மரக்கறி உணவு உண்மையில் விலை ஏறி யிருப்பினும் மாமிச உணவின் கெடுதல்களை உத்தேசித்து வேறு செலவைக் கொஞ்சம் சுருக்கிக் கொண்டு மரக்கறி உணவை வாங்கிக் கொள்ளுதல் அறிஞர் முறை.

(37) மரக்கறி பதார்த்தங்கள் சில நாட்கள் வரையில் அழுகாமலும் துர்நாற்றமெடுக்காமலும் பசுமை குன்றாமலும் இருக்கின்றன. மாமிசம் அவ்வளவு காலம் கெடாம லிருப்ப தில்லை.

(38) மாமிசம் உணவாகப் பக்குவப்படுவதற்கு முன்பே அசுத்தமாகி விடுகிறது. ஏனெனில் பிராணிகளின் உயிர் போன உடனே உடல் பிணமாகிறது. மானுடப் பிணத்தில் உண்டாவது போன்றே அதிலும் துர்நாற்றமும் அசுத்தமும் உண்டாகின்றன.

(39) ஆடுமாடுகளைக் கொல்லும்போது அவைகளின் கோபமும் ஆத்திரமும், மனிதரைச் சூக்குமமாகத் தாக்குவதன்றி அவைகளின் இரத்தத்துக்கும் மாமிசத்துக்குங் கூடக் கெடுதல் உண்டு பண்ணுகின்றன.

(40) மாமிச உணவுக்கும் மதுபானத்துக்கும் சம்பந்த முண்டு என்று மேல்நாட்டு வைத்திய சாஸ்திரிகள் தெளிவாக ஆராய்ச்சியின் முடிவாக வரைந்திருக்கிறார்கள். மாமிச உணவை உட்



கொள்ளாதவர்களிடம் குடியும் குறைந்திருக்கும்.

(41) சுருட்டு முதலிய மயக்கப் பொருள்களை மரக்கறி உண்பவர்களை விட மாமிசம் உண்கிறவர்கள் தாம் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது.

(42) வியாதியுள்ள பிராணிகளையும் கவனியாமலே கொன்று அவற்றின் மாமிசத்தை விற்கிறார்கள். அப்பிராணிகளுக்குள்ள வியாதி அந்த மாமிசத்தை உட்கொள்ளும் மனிதர்களுக்கும் உண்டாக ஏதுவாகிறது. இங்கிலாந்தில் புரொபசர் காம்ஜீ என்னும் டாக்டர் அந்தத் தேசத்தில் உட்கொள்ளப்படும் இறைச்சியில் ஐந்தில் ஒருபங்கு வியாதியினால் பீடிக்கப்பட் டிருந்த பிராணிகளைக் கொன்று சேகரிக்கப்பட்டதென்று பிரிவி கவுன்சிலுக்குத் தாம் அனுப்பிய ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறார். நமது தேசத்திலும் சரியாய்ப் பரிசீலனை செய்யாமலே பிராணிகளை மாமிச உணவுக்காகக் கொல்லுகிறார்கள். அதில் எவ்வளவு பாகம் வியாதி நிரம்பியதோ!

(43) லண்டன் நகரத்திலுள்ள டாக்டர் ஜோஷுவா ஓல்ட் பீல்டு என்பார் தமது அநுபவத்திலிருந்து சொல்லுவதாவது: இரண வைத்திய பரிசீலனையில் மாமிசம் உண்பவர்களை விட மரக்கறி உண்பவர்களுக்குப் புண்களின் உக்கிரம் குறைவு என்றும், இரணங்கள் சீக்கிரம் ஆறிவிடுகின்றன வென்றும் சொல்லுகிறார்.

(44) மாமிச உணவு கொஞ்சம் பலத்தைக் கொடுப்பது போலிருக்குமே யல்லாது உண்மையில் நிலையான பலத்தைக் கொடுப்ப தன்று. கள் குடித்த போது ஒருவனுக்கு மனக்கிளர்ச்சி உண்டாதல் போல் தோன்றிப் பின்னர் மூளை முதலிய உறுப்புகளுக்கு உண்மையில் கெடுதியே தருகின்றது. புலாலும் அம்மாதிரி தான்.

(45) நமது தேகத்தில் கணக்கிட முடியாத தனித்தனி உயிருள்ள நுண்ணிய ஜீவன்கள் இருக்கின்றன. அவை எப்போதும் நம்முள் வந்து போய்க் கொண்டிருக்கின்றன. நாம் மாமிசம் உண்பதால் அந்த ஜந்துக்கள் நம்மை விட்டு வெளியேறும் போது அசுத்தப் பட்டுச் செல்லுகின்றன. அவைகள், அயலார் தேகத்திலும் புகுமாகையால் அவர்கட்கு அசுத்தம் உண்டாதற்கு மாமிசம் உண்பவர்கள் காரணமாகிறார்கள்.

(46) தேகபலமும் வீரியமும் வேண்டிய போர்வீரர்களுக்குங் கூட மாமிச உணவு அவசிய மில்லை யென்பது சமீப காலங்களில் நடந்த சண்டைகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் விஷயங்களிலிருந்து நன்றாய்த் தெரிகிறது.

(47) குதிரைப் பந்தயம், பைசகிள் பந்தயம், கசரத்துப் பந்தயம் முதலிய பந்தயங்களில் மரக்கறி உணவு உண்பவர்களே பெரும்பாலும் ஜெயிக்கிறார்களென்பது உண்மையான அநுபவம்.

(48) உலகத்தில் அதிக கஷ்டமான வேலைகளை யெல்லாம், மரக்கறி உணவையே கொள்ளும் குதிரைகள் எருதுகள், யானைகள், ஒட்டகங்கள் முதலிய பிராணிகள் தாம் செய்கின்றன. புலி கரடி முதலிய பிராணிகள் செய்வதில்லை.

(49) மரக்கறி உணவு ஆயுள் வளர்ச்சிக்கு அநுகூலமானதென்று மேல்நாட்டுப் பரிசீலனர்கள் அநேகர் கூறுகிறார்கள். கேப்டன் டயமண்ட் என்னும் அமெரிக்கா தேசத்தார் ஒருவர் 100 வயதுக்கு மேல்கூடத் தினந்தோறும் 20 மைல் நடந்துகொண் டிருந்தார். அவர் 40-வது

வயதில் மாமிச உணவை முற்றிலும் விலக்கினவர். 114 வயதுக்குமேல் வாழ்ந்திருந்தார்.

சாமுயல் சாண்டர்ச் என்பார் 26-வது வயதில் மாமிச உணவை விட்டுவிட்டுத் தலைவலிகூட இல்லாமல் 88-வது வயதில் நன்றாயிருந்ததாகத் தாமே அந்த வயதில் ஒரு பத்திரிகையில் எழுதினார். பின்னர் அநேக வருடங்கள்வரை அவர் ஜீவித்திருந்ததாகத் தெரிகிறது. 1905ம் வருஷத்தில் லண்டன் நகரத்திலுள்ள மரக்கறி உணவு சங்கக் கூட்டத்தில், வயது முதிர்ந்தவர்களும் மாமிச உணவை விலக்கினவர்களுமான அடியிற் குறிப்பிட்டவர்கள் தங்கள் அநுபவத்தைப்பற்றிப் பேசினார்கள் :—

| | பெயர் | வயது |
|---|---|---|
| Mr. | நீயுகொம்பு | 80 |
| ,, | புரபசர் மேயர் எல். எல். டி. டி. | 81 |
| Miss. | வார்ட்லோ | 81 |
| Mr. | ஜோசப் வாலஸ் | 84 |
| ,, | டி. ஏ. ஹான்சன் | 86 |
| ,, | தாமஸ் வைல்ஸ் எப்.ஆர்,ஜி.எஸ். | 88 |
| ,, | சாமுயல் சாண்டர்ச் | 91 |

(50) ஐரோப்பா, அமெரிகா முதலிய அந்நிய தேசத்திலிருப்பவர்கள் இந்தியர்களைப் பற்றிச் சாதாரணமாய் எண்ணுகிறதாவது : இந்திய ஜனங்களுக்கு ஈஸ்வர பக்தி அதிகம் உண்டு. மதங்களில் அதிக ஊக்கமான உண்மையான பற்றுண்டு. அஹிம்சையை முக்கியமாய்க் கைக்கொண்டவர்கள். ஆகையால், மாமிச உணவைச் சாப்பிடும் வழக்கம் இந்தியாவில் இராதென்பது அவர்களுடைய எண்ணம். ஆனால் மாமிச உணவைப் பெரும்பாலும் இந்தியர்கள் உண்கிறார்கள் என்று கேள்விப்பட்டதும் இந்தத் தேசத்துக்கு மேனாட்டிலிருந்து வந்திருக்கிறவர்கள் தங்களுக்கு உண்டான ஆச்சரியத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இதனால் என்ன விளங்குகிறது? நமது தாய் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகவும் மாமிச உணவை நமது நாட்டினர் நிறுத்த வேண்டுமென்பதே யாம்.

---

# சர்வமத சம்மதம்

[வித்துவான் - A. வரதநஞ்சய பிள்ளை அவர்கள்]

---

இத்தொடர் மொழி, சர்வ மதங்களையும் சம்மதமாகக் கொள்ளும் ஒரு மதம் எனவும், சர்வ மதங்களாலும் சம்மதிக்கப்பெறும் ஒரு மதம் எனவும் இரு பொருள் பயப்பதாம். ஆதலின், முன்னர், எல்லா மதங்களும் உடன்பட்டுத் தழுவும் ஒரு மதம் அல்லது நெறி யாதென ஆராய்வாம்.

நாடோறும் நமது புலன்கட்குக் காட்சிப்படுவன ஒழியப்புலப்படாப் பொருளாகிய மரணத்தின் பின்னிலை, உயிர், வினை, வீடு, கடவுள் என்பவற்றைக் குறித்துக் கருதல் முதலிய அளவைகள் கொண்டு அவ்வக் குழுவினர் அடிப்பட்ட நாள் தொட்டுக் கொண்டுள்ள முடிபுகளே மதம் அல்லது சமயம் எனப்படும். இவன் சோனாட்டான், இவன் தமிழன், இவன் தெலுங்கன் என இடம் பற்றியும், பேசும் மொழிபற்றியும் ஒருவர்க்குப் பெயரெய்தல் போன்று, இவன் சைவன், இவன் புத்தன், இவன் வைணவன் என அவ்வச்சமயம் பற்றியும் ஒருவர்க்குப் பெயர் வழங்கக் காண்கின்றோம். உலகம் பலவிதம் என்பதற்கிணங்க அவரவர்களின் கல்வி, கேள்வி அறிவு ஆற்றல் முதலியவற்றிற்கும், சேர்க்கை, பழக்கம் முதலியவற்றிற்கும் ஏற்பக் கருத்து மாறுபாடு பலவகைத்தாக அமைதல் இயல்பாதலின், ஒருவர் கொண்டுள்ள கோட்பாடுகள் மற்றையோர்க்குப் பொருந்தாது முரணுதல் யாண்டும் நிகழ்வ தொன்றே. இவ்வாற்றால் எக்காலத்திலும் சமயங்கள் பலவிருந்தே தீருமென்றும், அவை தம்முள் பெரிதும் சிறிதும் விகற்பித்து நிற்கு மென்றும், அவற்றை ஒன்றாக்க முயலுதல் கூடாமை யென்றும் அறியக் கிடக்கின்றது. உண்மை இங்ஙனமாக ஒரு மதத்தன், பிறமதத்தனை ‘நீ மூடன், என் மதத்தைச் சார்ந்தா லொழிய உய்யும் வழிபெறாய்’ எனக் கடிந்துரைப்பது பொருத்தமற்றதே யாகும். கூடுமாயின் ஒரு மதத்திற்கும் மற்றோர் மதத்திற்குமுள்ள வேற்றுமைகளை ஆராயு முகத்தால் ஒன்றினும், சிறந்த பேருண்மைகளும் உயரிய நலன்களும் மற்றொன்றினிருப்பதைக் காட்டி ஒரு மதத்தன் உணர்வித்தல்வேண்டும். யாதோர் காரணமும் காட்ட வல்லாரல்லராய்த் தம்மதமே சாலச் சிறந்த தெனச் சாதிப்போர் பெரும் பேதையரென எள்ளி நகையாடற் குரியரே. நிற்க. அறம், பொருள், இன்பம், வீடென நுதலப்படும் நாற்பொருட்களுள், பொருளீட்டுதலும் இன்பந் திளைத்தலும் எல்லார்க்கும் இயல்பாகலின், எல்லா மதங்களும், பொருள் இன்பம் என்னும் இவ்விரண்டினும் ஒருப்படுதலுடையன வாதல் கூற வேண்டா. மற்று, அறத்தை நோக்குங்கால் ஆசிரியர் பரிமேலழகர் கூறுமாறு அஃது, ஒழுக்கம் வழக்கு தண்டம் என முப்பாற்பட் டியல்வவாயும் அவற்றுள் வழக்கு, தண்டம் என்னும் இரண்டும் காலதேசங்கட்கேற்ப, அரசர் அறிஞர் முதலியோரால் முறைப்படுத்தப்படுவதாயும் ஒழுக்கமும், அவ்வக்குலங்கட்கும் *பிரமசரிய முதலிய நால்வகை நிலைகட்கும் வெவ்வேறாக நூல்களாலோதப்படும் சிறப்பியல்பாகவும், மற்றெல்லோருக்கும் உடன்பாடாகிய, சினமின்மை, வெஃகாமை, பிறன்மனை விழையாமை, அழுக்காறாமை, அன்புடைமை, அடக்கம், பொறுமை வாய்மை, முதலாய பொதுவியல்பாகவும் அமைந்துள்ளதாயும் விரிதலின், இவற்றுள், இப் பொதுவியல்பொன்றே எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த நல்லொழுக்கமாதலின், எல்லா மதங்களும் இதனை இனிதேற்கு மெனற்கு ஐயமில்லை.

இதுகாறும் கூறியவாற்றால், புருடார்த்தம் நான்கனுள் பொருள் இன்பம், எனுமிரண்டும் முழுமையும், அறத்துள், ஒழுக்க மென்னும் பகுதியிற் பொதுவியல்புகளும், எல்லா மதமும் ஒருப்பட்டேற்றுக் கொள்வன வென விளங்கிற்று. இனி இந்நல்லொழுக்கமென்னுமிடத்தில் ஒருங்கு சந்தித்துப் பிளவுறா திருந்த மதங்கள், பின்னர் வீடு கூறும் நெறியில் வெவ்வேறாய்ப் பிரிந்து ஒன்றை யொன்று சிறி தொட்டியும், பெரிது மகன்றும், தனித்தனி செல்லத் தொடங்குகின்றன வெனவும் கண்டாம். எல்லா மதங்களும் உடன்படும் நெறியிதுவே என்பதுணர்த்தற்கு நம் ஔவைப் பிராட்டியார்,

“ புண்ணியமாம் பாவம்போம்
  போனநாட் செய்தவினை
மண்ணிற் பிறந்தார்க்கு
  வைத்த பொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை
  யெச்சமயத்தார் சொல்லுந்
தீதொழிய நன்மை செயல் ”

*பிரமசரியம், கிருகஸ்தம், வானப் பிரத்தம், சந்யாசம் என்பன ஆசிரம நிலைகள்.

என அருளினர். எல்லாச் சமயத்தாரையும் திருப்தி செய்யும் இவ்வுள வறிந்து கொண்டு இத்தகைய நல்லொழுக்கங்களையும் பொருள் இன்பங்களையுமே கூறி, அதனாலேயே நம் ஆசிரியர் வள்ளுவனார், "சமயக்கணக்கர் மதி வழி கூறா துலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்" "ஒன்றென்னின் வேறென்ப வேறென்னின் ஒன்றென்ப வன்றென்பவாறு சமயத்தோர் - நன்றென்ன - எப்பா லவரு மியைபவே வள்ளுவனார் முப்பான் மொழிந்த மொழி" எனப் பாராட்டப் பெற்றனர்.

இதன் மேற் சமயங்க ளொன்றுபட்டியலுமா றில்லை யென முடிதலின் இதனை நிறுத்தி இனி எல்லாச் சமயங்களையும் தான்றழுவும் ஒரு பெரிய மதம் யாதோ வெனத் துருவிச் செல்வோமாக.

நாம் கருதுகின்றபடி பலவாறு செல்லுவனவாகிய எண்ணிறந்த சமயங்களையும் தலைக்கூட்டி ஒரு சமயம் தழுவுமாயின், ஆ! ஆ!! அச்சமயமே நிகரற்ற பெரும் சமயம்! மிக மெய்ச்சமயம்!! சமயங்களின் சிகாமணியாம் சமயம்!!! அதுவே எல்லாச் சமயங்களையும் ஆளும் நீதி மிக்க ராஜாங்க சமயம்!!! என நாணாது கூறத் தடையில்லை யன்றோ?

அம்முழு மெய்ச் சமயத்தை ஆராயுமுன் ஒன்று கவனிக்கற்பாலது. எல்லா மதங்களையும் ஒன்று, தழுவுவதாயின் அத்தழுவுதல், ஒன்று போன்றிருக்குமா பலதிறப்படுமா? என்பதும், எல்லா மதங்களும் வெவ்வேறு முடிபினவாதலின் அம்முடிபுகளை முற்றுங் கொள்ளுமா? சில கடிந்து சிலவற்றைக் கொள்ளுமா? என்பதும் தான் கருதத் தக்கது. இவ்வையப் பாட்டை நாம் உலக ஒழுக்கில் வைத்துண்மை காண்போம். ஒரு குடும்பத் தலைவன், தன்னாற் காப்பாற்றப்படும் தாய், தந்தை, மனைவி, மக்கள் உடன் பிறந்தோர் முதலியவர்களைத் தழுவிச் சமமாக நோக்குகின்றான் என்றால், அவன் தன் மனைவியிடம் காட்டும் காதலை அவ்வீட்டுவனைப் பெண்கள் பாலும் காட்டல் இயலுமா? பெற்றோர்க்குச் செய்யும் வழிபாட்டைத் தன் மனைவிமக்களுக்கு மியற்றல் தகுமா? தன்னின் மூத்தோர்களை மேலிடத் திருத்திக் கீழே யமர்வது போலத் தன்னின் இளையாரையும் மேலிருத்தித் தான் அவரடிக் கீழ்த்தாழ இருத்தல் முறையாமா? ஆகாது, ஆகாது. மற்றென்னோ சமமாக நோக்குதல் எனின், அஃது அவர்கள் உண்டி உடை முதலியவற்றில் வேற்றுமையறவும் அவரவர் தகுதிக்கேற்ற நிலையில் தன் கடமையை வழாது செய்யவும் மனமொத்திருத்தலே யாம். அவ்வாறே பிற மதங்களனைத்தையும் தழுவிச் சமன்காட்டும் ஒரு மதமும் நடக்குமென்ப தறிகின்றோம். ஒன்றையொன்றொவ்வா மதங்களில் எதனையும் தள்ளாது அவை கூறும் பொருண்மைகளுள் ஏற்பன சில கொண்டு ஏலாத சிலவற்றைக் கடிந்து அவற்றினும் உயர்ந்த உண்மைகளைக் கூறுமுறையானன்றி வேறு முறையால் ஒரு மதம் எல்லா மதங்களையும் உடன்படல் இயலாததொன்றும் எனவும் அறியக்கடவேம். மிக நுண்பொருட்கள் பல கூடித் தோன்றும் பளுவை, வலிய பொருட்கள் சில கூடித் தோற்றுவிக்குமாதலின், அப்பொருட்களை நிறுத்து எடையிற் சமன்காட்டுந் துலாக்கோல் ஒரு பஞ்சுருண்டையையும் அதே பருமனுள்ள ஓர் இரும்புக் கட்டியையும் சம எடையுள்ளதாகக் காட்டுமா? காட்டா



தன்றோ? ஆகவே, எவ்வெச் சமயத்தினும் எம்மட்டும் நல்லுண்மைகள் உளவாமோ அவையிற்றை இனைத்தென உணர்த்தி, கோடாது செல்லுதலே எல்லா மதத்தையு முளப்படுக்கும் சிறந்த ஒரு சமயத்தின் நன்னோக்கமாகுமெனக் கோடல் வேண்டும்.

இம்முறையே கொண்டு எல்லாச் சமயங்களையும் உடன்படும் சமயத்தைக் காண்பேமாக.

முதற்கண், எந்தமதம், எல்லா மதங்களையும் தழுவத் துணிந்து தலைப்படுமோ, அந்த மதம், அவைகளைத் தரமறிந்து பிரித்து நிறுத்தி அவற்றைத் தான் சூழ்ந்து நின்று காத்து, அவற்றிற்கும் ஏற்றவாறு மதிப்புத் தந்து நடத்தல் வேண்டும். இங்ஙனம் சமயங்களைப் பிரித்தாளும் முறையை எச்சமயத்திற் காண்கின்றோமோ, அச்சமயமே அவ்வாறு தழுவ வுடன்படும் சமயமெனக் குறிக்கொள்ளக் கடவேம்.

பரந்துபட்ட பல சமயங்களுள்ளும் ஏனைச் சமயத்தைக் குறித்து நிந்திக்குமத்துணை யல்லது, மற்றவற்றைத்தகுதி பெற நிறுவித் தழுவுமாறு கண்டேமில்லேம். ஆயின், நம் சைவசமயமொன்றே, கடவுளில்லை, உயிரில்லை, வினையில்லை எனக் கூறும் நாத்திகம் முதலாகவுள்ள பல சமயங்களையும் புறப்புறம் புறம் அகப்புறம், அகம் என நாற்கூற்றினவாக வகுத்து அதனோடமையாது "புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழி யுழன்றும்......வேத சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றாற் சைவத்திறத்தடைவர்......ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என அப்புறப் புறச் சமய முதலிய வேண்டற் பாலவே அவற்றினின்று பையப் பையப் படியேறி மேனிலை புகுதல் ஒப்பத்தக்கதே எனத் தாங்கித் தழுவுகின்றது கண்டாம். நமது தவஞானச் செல்வராகிய சிவஞான யோகிகள் தமது செம்பவளத் திருவாய் மலர்ந்தருளிய சிவஞான போத மாபாடியத்தில், சைவசமயம், ஏனைச் சமயங்களைத் தழுவுமாறு குறிப்பிப்பார், யானை கண்ட குருடர் கதையைக் கூறுகின்றார். வால் தொட்ட கண்ணிலி யானை துடைப்பம்போல்வதெனவும், கால் நீவியகுருடன் அற்றன்று இஃதுரலை நேர்வதென்றும், செவி வருடிய கண்ணறையன் நீவிர் கூறுதல் முழுப்பொய் இக்கரி முறமே யொக்குமெனவும், துதிக்கை தீண்டிய அந்தகன் எல்லீரும் பொய்த்தீர், உலக்கையே நிகரிவ் வும்பற் கென்றும் ஒருவரோடொருவர் கலாய்த்துழி, விழியுளானொருவன் அவ் வழியுளானுய் அவர் கூறல் கேட்டு நகைத்து மனமிரங்கி, அன்பீர், நீவிர் கூறுவ முற்றுமுண்மையே எனினும், இக்கரியின் முழுவுருவமும் அறிந்தீரல்லீர். அறிவீரேல் நீவிர் கொண்ட வுவமத்தின் மேலும் உள்ள உருவமைப்பைக் கருதி நாணுறுவீர். நீவிர் அறிந்த அத்துணையேயன்று இவ்வத்தியின் முழு உருவம் என உண்மை காட்டினன் என்னும் இக்கதையினால் பல திறப்பட்ட சமயங்களும் கூறும் பொருட்களனைத்தும் தன்னகத் தடங்க, அவை கூறாத பல உண்மைகளை மேலும் தன்கட் சிறப்பாகக் கொண்டு மிளிர்வது நம் சைவசமயமென்பது போதரும்.

இங்ஙனம் பல சமயப் பொருளுண்மைகளையும் சைவசமயமொன்றே தழுவிச் செல்வதற்கு எடுத்துக் காட்டாகச் சில கூறிக் காட்டுவாம்.

இறைவனது அட்டமூர்த்தங்களாக, மண், நீர், தீ, காற்று, வான், என்னும்

ஐம்பெரும் பூதங்களையும் உயிர், பரிதி,
மதி என்னும் மூன்ேறாடு கூட்டிச்
சைவம் ஓதும். இவற்றுள் மண் முதல்
நாற்பூதங்களேயே உடன்பட்டுக் காண்ட
லளவை யோடமையும் நாத்திகம், அம்
மூர்த்தங்களில் செம்பாதியை இயற்கை
யாகவே உண்டெனக் கோடலின், அது
வும் சைவ சம்பந்தம் ஒருபுடை ஏற்ற
தாம். அன்றி உயிரே பிரமம் என்னும்
ஏகான்மவாதமும், சுடர் மண்டிலங்களை
யும், நெருப்பையும் வழிபடும் சமயங்
களும், தனித்தனி, அவ்விறைவனது
மூர்த்தங்களுளொவ்வொன்றைக் குறிக்
கொண்டனவாகிச் சைவத்தின் பாற்படு
வனவாம். மற்று வானகத்தை நோக்கி,
அருவங் கருதி இறைவனை வழிபடுவ
தாக இற்றை ஞான்று எழுந்த பிரம
சமாஜமும், அம்மூர்த்தத்துள் ஒன்றின்
மூலமாகக் கருத்தைச் செலுத்துதலால்
அஃதும் சைவசமயத்தின் ஓரங்கமாகத்
தழுவப்படும். இனி, அறிவே பொருள்,
அறமே புரிக என்னும் பௌத்தமும்,
தலைபறித்து, உயிர்க்கருள் தாங்கித்
தவமே புரிக என்னும் ஆருகதமும்,
வினைக்கீடாக வுயிர் பற்பல உடல் தாங்
கிப் போகந் துய்த்தும் இன்னலுற்
றும் வருதலின் கடவுளே வேண்டா
வினையே சாலும் என்னும் பூர்வமீமாம்ச
மும், கூறும் பொருட்கள் பலவும் சைவ
சமயத்துப் பரக்க விரித்துணர்த்தலின்,
அவையும் சைவச் சார்பினவே யாகின்
றன. இறைவனொருவனே உலகாகி உயி
ராகி அனைத்துமாய் நடிக்கின்றான் என்
னும் கிரீடாப் பிரம வாதமும், எங்கும்
நிறைந் தெல்லாவற்றையும் இயக்கு
கின்றான் இறைவனெனக் கூறும் சைவ
சமயத்தின் கருத்தை ஒருவாறு திரிபு
பட வுணர்ந்த தியக்கமாதலின் அஃதும்
சைவத்தின் திரிபினுக்கமா யடங்கு
வதே. பின்னும் மூலப்பிர கிரு
தியே முதற் பொருள், அதனுள்
வெளிப்படாதடங்கிக்கிடந்த முக்குணங்
கள் வெளிப்பட்டு மான் முதலிய தத்து
வங்கள் வெளிப்படும் என்னும் சாங்கிய
மும், சைவங்கூறும் திரோபவத்
தொழிலின் திறத்ததா யடங்கும். பிரம
ஞான சங்கம் ஆதித்த மண்டிலத்
தின் அதிதேவதையை உணர்ந்தால்
போதும்! என்பதால், கணித நூற்களில்
இரவிக்கு அதி தேவதை சிவபரஞ்
சுடரே என ஓதப்படுதலின் அஃதும்
சைவத்திற்குப் புறம்பாகாது. இவ்வாறே
எல்லாச் சமயங்களையும் ஆய்ந்தாய்ந்து
அவைகூறும் நுண்பொருட்களை யுணர்ந்
துணர்ந்து அவற்றைச் சைவசமய
நூலோடு ஒப்பிட்டு நடுநிலை திறம்பாது
பார்ப்போருக்கு உலகிலுள்ள எல்லா
மதங்களும் இனித் தோன்றவிருக்கும்
பிற்காலச் சமயங்களும் ஆகிய அனைத்
தும் சைவசமயம் என்னும் இப்பெருங்
கடலில் சிறுதிவலை போன்றடங்கும்
என்பது புலனும். இவ்வுண்மையைத்
தமது மெய்யநுபவத்தா லினிதுணர்ந்
தன்றே, நம்மணி வாசகனார். "அறு
வகைச் சமயத்தறுவகை யோர்க்கும்
வீடு பேறாய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம்புரையும் கிழவோன்" என அருள்
வாராயினர். நமது ஆளுடைய அரசும்,
"கூவலாமை குறை கடலாமையைக்
கூவலோ டொக்கு மோகட லென்னல்
போல் பாவகாரிகள் பார்ப்பரிதென்ப
ரால் தேவதேவன் சிவன் பெருந்தன்
மையே" என்றும் தாயுமானப்பெருந்
தகையும், "குலவாகின்ற ஆறனைத்தும்
புகுங்கடல்போற் சமய கோடியத்தனை
யுந் தொடர்ந்து புகும் ஆதிகட்பே"
என்றும் அருளினர். தன்னிற்சூழ்ந்
தோர் பலரையும் உளப்படுத்தித் தழுவு
தல் பெரியா ரிலக்கண மாதல் போன்று
பல திறத்தவாகிய எச்சமயத்தினையும்



தாங்கித் தனக்கங்கமாகக் கொண்டியல்
வது ஓர் அரும்பெறற் சமயத்தின்
மேதக்க வியற்கையா மென்றும் இங்
ஙனம் சைவந் தழுவுதல் போன்று பிற
சமயங்கள் எவையும் தழுவுதல் இல்லை
யென்றும், நுனித்தறிவோர், மெய்
பெறக் காணுதிரார்.

மற்றும், வெவ்வேறு கடவுளரை
வழிபடினும், "யாதொரு தெய்வங்
கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"
எனப்படுதலால் அத்தேவர்களும் நம்
முழுமுதற் கடவுளே யாதலின், எச்சம
யக் கடவுளரும் வேறல்லர் என்பது
துணியப்படும்.

இதுகாறும் சைவசமயம் ஏனைச் சம
யங்களை இயற்கை முறைக்கேற்பத்
தழுவுதல் கூறப்பட்டது.

இனிச் சைவம் தனக்கெனச் சிறப்
புறக் கொண்டிருக்கும் பேருண்மைகள்
பிற சமயத்துக் காணப்படாதனவாக
வுள்ளன யாவை? என்பதனை விளக்கி
எடுத்த விஷயத்தை முடிப்பாம்.

அத்வைதம் என்னுஞ் சொற்குப்
பலபடப் பொருள் கொண்டு பிணங்கும்
துவைதம், கேவலாத்வைதம், விசிஷ்
டாத்வைதம் முதலியன போலாது,
சுத்தாத்வைதங் கூறுவதே சைவ சம
யத்தின் சிறப்பியல்பாகும். பொருள்,
ஒன்றென்னின் ஏகமென்றும் இரண்
டென்னின் துவைதமென்றும் சொன்னி
கழுமாதலின், அங்ஙனங் கூறாது இரண்
டன்மை எனக் குறித்துக் கூறியது,
"ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்
றென்ற நீபாசத் தோடுளேகாண்" என
விளக்கி, என்னானை "ஏகமிரண் டென்
னுமற் சும்மாவிரு..." என்றபடியும்,
"சென்று சென்றணுவாய்த் தேய்ந்து
தேய்ந் தொன்றும்;" என்றபடியும்,
இறைவனோ டொன்றி ஆன்மா இன்பத்
தழுந்தும் முடிவை நோக்கியே, எனத்
தெளிவித்து, 'வேதாந்தத் தெளிவாம்
சைவசித்தாந்தம்', 'ஓங்கும் வேதாந்த
மென் றுச்சியிற் பழுத்த ஆராவின்ப
வருங்கனி பிழிந்த சாரமாய்த்' திகழ்
வதாமெனக. இங்ஙனம் உயிர் சதசத்து,
இறைசத்து, பாசம் அசத்து என இம்
முப்பொருளையும் தடை விடைகளால்
பல சமய வாதிகளும் ஒப்பத் தருக்க
நெறி பிறழாது நாட்டி, அயராவன் பின்
அரன்கழல் சென்று, ஏகனாகி இறை
பணி நிற்கும் வீடு பேற்றை ஐயமறத்
தெளிக்கும் சிறப்பு, வைதிக சித்தாந்த
மாகிய சைவத்தினுக்கே உரித்தாத
லறிக.

இவற்றாற் சைவ சமய நண்பர்கள்
தேர்ந்தொழுகற் குரியவாகக் கிடைப்
பன எம்மதம் பெரிது, நும் சமயம்
சிறிது, என்னும் பேதம் பாராட்டாது,
உலகில் ஆன்மாக்கள் பலவும் தகுதிக்
கேற்ப ஒழுகி உய்யுமாறு பரந்துதோன்
றிய சமயங்கள் யாவும் ஒவ்வோர்
மெய்ம்மையை மேற் கொண்டனவே
யென்பதும் நாளடைவில் அவ்வச் சமய
நெறியிற் பயின்று மேன்மேற் சமயங்
களில் புக்கு இறைவனருட் டுணையால்
உயிர்கள் மேம்பாடுறு மென்பதும், எல்
லாச் சமயங்களும் நம் சைவத்திற்குரிய
அங்கமாதலின், நம்முடலிலுள்ள பல
வுறுப்புகளும் வேற்றுமை பாராது,
தத்தங் கரும நிகழ்ச்சிக் கண் ஒன்றற்
கொன் றுதவுதலிற் சமப்படுதல்
போலவே, அவ்வச் சமயங்களும் தத்
தம் நெறியில் ஒழுகி ஒரோருண்மை
யைக் கடைப்பிடித் தொழுகலிற் சம
மாந் தன்மையினவே என்று கோடல்

நடித்துக் காட்டலாம். ஆனால் சம நிலைக்குரிய மெய்ப்பாடுகளை, அச்சமநிலையினை யுண்மையில் அனுபவித் தறிந்தாலன்றி நாம் அரங்குகளில் நடித்துக் காட்ட வியலாது. இஃது ஒரு பற்றுமின்றி, விருப்பு, வெறுப்பற்று இருக்கும் துறந்த முனிவர்கட்கே இயலும்.

இதன் பொருட்டே, தொல்காப்பியப் பொருளதிகார மெய்ப்பாட்டியலினும், ஆசிரியர் தொல்காப்பியனார் மிகவும் சிறந்தன வாகிய மெய்ப்பாடுகள் இவையிவை என்று கூறிடுங்கால்,

"நகையே யழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப"

என்னுஞ் சூத்திரத்தில், நாடக நூற்களில் கூறியுள்ள ஒன்பது சுவைகளுள், சமநிலை யொழித்து, எஞ்சிய எட்டையுமே விதந்தெடுத்துக் கூறினார். தொல்காப்பியனார் சமநிலையினை யொழித்து மற்றவற்றையே தம் சூத்திரத்திற் கூறியதற்குக் காரணம் இதுவென்பதை நச்சினார்க்கினியர், தாம் இச்சூத்திரத்திற்குக் கண்ட வுரையிற் கூறுகின்றார். அவ்வுரை வருமாறு:—

"மற்றிவ் வெட்டனோடும் சமநிலை கூட்டி ஒன்பதென்னுமோ நாடகநூலுட் போலவெனின், அதற்கு ஒரு விகாரமின்மையின் ஈண்டுக் கூறிய திலனென்பது, அதற்கு விகார முண்டெனின், முன்னை யெட்டனுள்ளுஞ் சார்த்திக் கொள்ளப்படும். அஃதல்லதூஉம், அஃதுலகியல் நீங்கினார் பெற்றியாகலின், ஈண்டு உலக வழக்கினுட் சொல்லிய திலனென்பது, ஒழிந்த எட்டும் உலகிய லாகலிற் கூறினான், "வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்" என்று புகுந்தமையி னென்பது. அவை எட்டு மாமாறு இனிக் கூறுதும்:—"

நமது உள்ளங்களில் எழும் ஒவ்வொரு உணர்ச்சிக்கும் ஒவ்வொரு வகை மெய்ப்பா டுண்டென்று நாமெல்லாம் அறிவோம். ஆதலால் ஒருவனுடைய யாக்கையில் சிற்சில மெய்ப்பாடுகள் தோன்றுமாயின், அம்மெய்ப்பாடுகட்குக் காரணமாய உணர்ச்சிகள் அவனுடைய உள்ளத்தில் நிகழுகின்றதென நாம் திண்ணென உணர்ந்து கொள்கிறோம். ஆகவே ஒருவன் உண்மையில் ஓருணர்ச்சியை யனுபவித்தால் மட்டுமே, அவனுடைய யாக்கையில் அவ்வுணர்ச்சிக்குரிய மெய்ப்பாடுகள் தோன்றும். ஆனால், நாம் நாடக அரங்குகட்குச் சென்று ஆண்டுத் தோன்றி நடிக்கும் மக்களைப் பார்க்குங்கால், அவர்கள் தமக்கென ஓருணர்ச்சி யற்றிருந்த போதிலும், கதைப்போக்கில் சிற்சில சமயங்களில் தம்மையும் மறந்து அவ்வுணர்ச்சிகட் காளாகி, அவைகட்கேற்ற மெய்ப்பாடுகளைத் தம்முடம்பின்மேல் கொள்கின்றார்கள். வேறு சில காலங்களில், இந்நடிகர்கள், கதைப் போக்கினைத் தழுவிவரும் உணர்ச்சிகளைத் தாம் அனுபவித் தறியாமலே, அவ்வுணர்ச்சிகட் கேற்ற மெய்ப்பாடுகளைத் தம்முடம்பின்மேல் கொள்ளுந் திறனுடையவர்களாக விருக்கின்றார்கள். பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்து நாட்டில் விளங்கியிருந்த ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்னும் நாடக நூலியற்றும் புலவர், தாமியற்றிய நூற்களைப் பயின்று இன்புறும் கற்றோருக்கே தெரிந்தவராக இருந்தார். அக்காலங்களிலெல்லாம் அவரைப் பற்றிக் கற்றோரல்லாத மற்றோர்க்கு யாதுமே தெரியாது. ஏனெனில், அவருடைய நாடகங்கள் ஒன்றேனும் பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் அரங்குகளில் நடிக்கப்படவே



யில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் டேவிட் காரிக் (David Garrick) என்பவர்போன்ற புகழ் பெற்ற நடிகர்கள் நாடக அரங்குகளில் தோன்றி, ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடக நூற்களை யெல்லாம் நடித்துக் காட்டி, அவரை எல்லோருக்கும் தெரியச் செய்தார்கள். ஆதலால் ஒரு நாடக நூலின் மேன்மை அதனை நடித்துக் காட்டுவோரின் திறமையில் விளங்கும். பொருள் விளங்காச் சிற்சில அடிகளும் சந்தர்ப்பத்தை நோக்கி, நடிகர்கள் தம்மை அவ்வப் பாத்திரங்களாகவே மதித்து நடிக்குந்தோறும், புதுவகையான பொருள்களைப் பெறும். இவ்வாறே ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடக நூற்களுட் கண்ட சில பொருள் விளங்கா அடிகள், நடிக்குங்கால் பொருள் பெற்றன.

ஆனால் சமநிலைக்குரிய மெய்ப்பாடுகளைக் காட்டுவதற்கு அதற்குரிய மனநிலையினை நம்முள்ளங்களில் அனுபவித் தறிந்தாலன்றி, வேறொன்றானும் அறிய முடியாது. இச்சம நிலைக்கு மெய்ப்பாட்டுக்குறி ஒன்றுமில்லை யாதலும், அஃது உலகியல் வழக்கில், சாதாரண மக்கட்டொகுதியுட் காணப்பெறாது, உலகியலினின்றும் நீங்கின முனிவர்களிடத்தே காணப்படுதலும் ஆகிய இவ்விரண்டு காரணங்களுமே சமநிலையினை மெய்ப்பாடுகளினின்றும் நீக்குவதற்குத் தொல்காப்பியரின் மனத்தில் முன்னின்றன.

யாமெல்லாம் இவ்வுலகின் கண் தோன்றி, இவ்வுலகப் பொருள்களையே நிலையென்று நம்பி, நமக்கு இன்பம் பயப்பனவற்றை விரும்பியும், துன்பம் பயப்பனவற்றை வெறுத்தும், அவைகளால் மாறிமாறி இன்ப துன்பங்களில் உழன்றும் வருகின்றோம். ஆதலால் இவைகட்கெல்லாம் மேற்பட்டதான சமநிலை யென்னும் விழுமிய தன்மையினை யாம் அறிதற்கு ஏலாதவர்களாயிருக்கின்றோம். பளிங்குக் கண்ணாடி தனக்கென ஒரு நிறமற்றிருந்தும், அது ஒரு காலத்தாவது நிறமற்றிருந்ததை யாம் கண்டதேயில்லை. அது தன்னைச் சாரும் பொருளின் நிறத்தைத் தானும் கொண்டு திகழ்கின்றது. சிவப்புத் துணியின்மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு பளிங்குக் கட்டியைப் பார்த்த ஒரு புதிய மாணவன், பளிங்குக் கட்டியின் நீர்மையினை அறியானாகையால் சிவப்பு நிறமே பளிங்குக் கட்டியின் நிறமென்று பிறழ வுணர்வான். அஃதேபோல், நாமும் சார்ந்ததன் வண்ணமாகும் நம் உண்மை நிலையினை யறியாது, இவ்வுலகப் பொருள்களையும், நம்மனைவி மக்களையும் நிலையென்று நம்பி, நம்மை மறந்து, நம்மின் முற்றும் வேறாய அவைகளையே நாமெனவும் மயங்குகின்றோம். இவையெல்லாம் நாம் அல்ல வென்பதை விளக்கும் பொருட்டே தாயுமானாரும்,

"வந்தெனுடல் பொருளாவி மூன்றும்நின்கை - வசமெனவே அத்துவா மார்க்கம் நோக்கி, ஐந்துபுலன ஐம்பூதம் கரண மாதி - அடுத்தகுணம் அத்தனையும் அல்லை யல்லை, இந்தவுடல் அறிவு அறியாமையும் நீயல்லை - யாதொன்று பற்றின தனியல்பாய் நிற்கும், பந்தமறும் பளிங்கனைய சித்து நீ - நின்பக்குவங் கண்டறிவிக்கும் பான்மையேம்யாம்"

என்னும் தமது பாட்டினும்,

"தத்துவ முழுதும்சடம் உனைக் காணாது
இத்தை நீநடத்தற் கிறைவனோ அல்லை
அறிவனும் அல்லை அறியான் அல்லை
செறியருள் காட்டத் தேர்ந்து காண்பவன்நீ
யாது சார்ந்திடினும் யான்அது வென்னும்
போதகன் னுணர்வு புகன்றிடிற் சிறிதா
மறைத்திடு மூல மலத்தினால் பாசச்
சிறைக்குளே கிடந்து தேகம் நானென்று

வேண்டும் என்பதும், மற்று, எல்லா வுயிரும் இறைவன் அமரும் கோயிலாதலின், யாவருக்கும் இயன்ற உதவிசெய்து இன்மொழி கூறி அருள் சுரந்தொழுகல் வேண்டுமென்பதும், எச்சமயத் தெய்வமும் நாம் வழிபடும் மெய்ச் சமயத் தெய்வமே எனச் சிவபெருமான் அருட்டிறத்தை மனங் கசிந்துருகி வாழ்த்திப் பணி செய்து கிடத்தல் வேண்டு மென்பதும் இவை போன்ற பிறவுமாம்.

அத்தேவர் தேவரவர்
தேவரென் றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப்
புலம்புகின்ற பூதலத்தே
பற்றேது மில்லாதென்
பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே
சென்றூதாய் கோத்தும்பீ.

—திருவாசகம்.

[இது புதுச்சேரியில் சைவசித்தாந்த மகாசமாஜ உ௰உ-வது கூட்டத்தே சுருக்கமாக நிகழ்த்திய சொற்பொழிவின் விரி.]

## சம நிலை

[வல்லை - பாலசுப்பிரமணியன், பி. ஏ.]

" யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் றுமிலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே "

—கணியன் பூங்குன்றன்,
(புறநானூறு - 192.)

சமநிலை யென்பது, பண்டைத் தமிழர் தாம் விதிப்படி நிறுவிய அரங்குகளில் நடத்திக்காட்டிய நாடகங்களிலும், நாடகக் காப்பிய ஆசிரியன்மார்கள் தாம் இயற்றியிட்ட நாடகக் காப்பிய நூல்களுள்ளும் இன்றி யமையாதன வென்று கடைப்பிடித்த ... யவிநயம், பயச்சுவை யவிநயம், இழிப்புச்சுவை யவிநயம், அற்புதச்சுவையவிநயம், இன்பச்சுவை யவிநயம், அவலச்சுவை யவிநயம், நகைச்சுவை யவிநயம், நடுநிலைச்சுவை யவிநயம், உருத்திரச்சுவை யவிநயம் என்னும் ஒன்பது சுவைகளில் ஒன்றாகும். இவ்வொன்பது சுவையினையே வடநூலாரும் நவரசமெனக் கூறுப. இதனை,

" நல்ல சிங்காரம் வீரங்கை
சாந்தங் கருணைகுற்சை
ஒல்லு மற்புதம் பயத்தோடு
உறுகோபம் இரதமொன்பான் "

என்னும் சூடாமணி நிகண்டுப்பாட்டா னறிக. மேற்கூறிய நடுநிலைச் சுவை யவிநயமென்பதூஉம், சூடாமணி நிகண்டுப் பாட்டிற்கூறிய சாந்தம் என்பதூஉம், சமநிலையினையே குறிக்குமென்றறிக. கடல் கோட்பட்ட பண்டைத் தண்டமிழ் நூற்கள் பலவற்றுள், நாடகக்காப்பியங்களும், நாடகங்களின் தன்மையினைக்கூறும் நாடக விலக்கண நூற்களும் எண்ணிறந்தன, பாழுங் கடலுக்குத் தப்பிய சிற்சில நூற்களும் காலச்சுறவினால் சிதைக்கப்பட்டும், செல்லெறும் புகளினாலும், இராமபாணங்களினாலும் எரிக்கப்பட்டும், போற்றுவா ரற்று மறைந்து போயின. அவற்றுள் பலவற்றைப் பிற்றைக்காலத்துத் தோன்றிய அடியார்க்கு நல்லார் என்பவர் போன்ற பேருரையாளர் தம் உரைகளில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டதனால் யாம் பெயரளவாகவேனும் அறிகின்றோம். அவ்வளவுதானும் செய்ததற்கு, யாம் அவர்கட்கு பெரிதுங் கடப்பாடுடையேம். கோவலன், மாதவியின் நலத்தை விழைந்து அவள் பாற்சென்றது கண்ணகியின் கற்பின் திண்மையினை ஒளிரச் செய்தது என்பது உண்மையேனும், அது தமிழிலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக்காரர்களுக்குப் பேருபகார மொன்றும் செய்தது. கோவலன் மாதவியை விழைந்து அவள் பாற்சென்றிலனேல், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துப் புகார் காண்டத்து மூன்றாங் காதையான அரங்கேற்று காதையைப் பாடியிருக்கவே மாட்டார். அங்ஙனமாகவே, நாம் இப்போது காணும், பண்டைத் தமிழ்நாட்டு நாடக நூற்களின் பெயர்களையும், அவற்றின் இலக்கணங்களைக் கூறும் நூற்களின் பெயர்களையும், அவையிற்றினை யெல்லாம் இயற்றியிட்ட ஆசிரியன்மார்களின் பெயர்களையும், ஒரு சார் அரங்கினது தன்மை, யாழாசிரியனது நீர்மை முதலிய நாடக இலக்கணங்களையுந் தன்னுட் கொண்டிருக்கும் அரிய *உரையினை அடியார்க்கு நல்லார் இயற்றியிருக்கவே மாட்டார். ஆகலான், கோவலன் மாதவிபாற் சென்றது, இம்முகமாகப் பார்க்கையில் மிக்க பயனுடைத்தே யாமென்றறிக.

இனி, சமநிலை எனப்படூஉம் நடுவுநிலை யவிநயச் சுவையின் இலக்கணம்,

" நாட்டங் கலை.நடுவுநிலை யவிநயம்
கோட் பாடறியாக் கொள்கையும் மாட்சியு
மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும்
பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும்
குறிப்பின் றாகலும் துனுக்க மில்லாத்
தகைமிக வுடைமையும் தண்ணென வுடை [மையும்
அளத்தற் கருமையும் அன்பொடு புணர்த்த [லும்
கலக்கமொடு புணர்ந்த நோக்கும் கதிர்ப்பும்
விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர் "

என அடியார்க்கு நல்லாருரையில் யாம் காணக் கிடக்கின்றது. சமநிலை யவிநயத்திற் கிலக்கணங் கூறும் இவ்வகவற்பாவினை உற்று நோக்குங்கால் எவ்வகையானும் அசைவும், அவிநயமும் அற்றிருப்பதே, இதன் அவிநயம் என்று யாம் உணர்கின்றோம். சமநிலையொழிந்த மற்றெண்வகை யவிநயங்களில் வீரச்சுவைக்குச் சிவந்த கண்ணும், அச்சத்திற்கு ஒடுங்கிய உடம்பும், இழிவிற்குச் சோர்ந்த யாக்கையும், அற்புதத்திற்குச் சொற் சோர்வடைதலும், காமத்திற்குக் காரிகையொடு கலந்த கடைக்கண்ணும், அவலத்திற்குக் கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும், நகைத்தற்கு விட்டு முரி புருவமொடு விலா வுறுப்படைதலுமெனப் பற்பல மெய்ப்பாடுகள் கூறப்பட்டிருக்க, சமநிலைக்கு மட்டும் ஒருவகை மெய்ப்பாடுகளு மின்றி அசைவின்றி இருத்தலே யவிநயமாம் என்று கூறியிருத்தல் ஈண்டு நாம் கவனிக்கற்பாலது. அவிநயமே ஒன்றுமில்லாத சமநிலைக்குச் சமநிலை யவிநயம் என்று பெயர் கூறுவது, நிறமே ஒன்றுமில்லாத பளிங்குக் கல்லிற்கு, பளிங்கு நிறம் பெயர் என்று கூறியது போலாம். மற்றெண்வகைச் ...க்குரிய மெய்ப் பாடுகளை நாம் ... ஒருகால் அரங்குகளில்



18719

வல்வினை புரிந்து மயங்கினை யந்தத்
தொல்வினைப் பயன்கள் குட்டின மிப்பால்
இருவினை யொப்பு மலபரிபாகம்
திருவருள் பதிக்கத் தேடிவந்தனம் யாம்''

எனச் சிற்றம்பல நாடிகள் தமது திருச் செந்தூரகவல் அடிகளினும் வலியுறுத்திக் காட்டினர்.

மேற்கூறிப் போந்த பளிங்கினைப் போன்றே, நாம் ஒவ்வொருவரும், ஒரு பற்றுமின்றி இயங்கவல்ல நமது தூய உள்ளத்தை இழுக்கு நெறிகளிற் செலுத்தி மாசு படுத்திக்கொள்ளுகிறோம். அந்தோ! எம் அன்னையின் வயிற்றிலிருந்து இவ்வுலகில் பிறந்த நாள் தொட்டுப் பற்பல பற்றுக்களால் நாம் தொடரப்பட்டு, அவைகளினின்றும் மீளுதற்கு வழி யறியாமல் அலைகின்றோம். ஒரு பொருளை யாம் விழைந்தால் அதனை அடைதற்கு யாம் பல்காலும் முயல்கின்றோம். அதற்குப் பல துன்பங்களேயும் உழக்கின்றோம். ஒருகால் நமக்கு நற்கால மிருந்து, இறைவன் திருவுள்ளமும் அவ்வண்ணமே யானல், நாம் எடுத்த காரியம் கைவரப்பெற்று மகிழ்ச்சி யுறுகின்றோம். அப்படியின்றி நம்முட் பெரும்பாலோர், தாம் எடுத்த வினையினை முடிக்கலாற்றாது வருந்துகின்றனர். இனிச் சிற்சில காலங்களில் நமக்கு இன்பம் பயப்பனவென்று நினைத்து, அரிதிற் றேடிப் பெற்ற பொருள்கள், திடீரென்று நம்மைவிட் டகல்கின்றன. அப்போதும் அதன் பிரிவினை யாற்றாது நாம் வருந்துகின்றோம்.

ஆகவே, ஒரு பொருளின் மாட்டு நாம் பற்று வைப்போமானல், அது கிடைக்குங்கால் இன்பமும் பிரியுங்கால் துன்பமும் அடைகின்றோம். அவ்வின்ப துன்பங்கள் தாமும், ஒரே பெற்றித்தாக நம்மாட்டு நிலைத்திருக்கக் கண்டிலம். என்னை? அவ்வின்ப துன்பங்களைத் தரும் பேறிழப்புகள் நம்மாட்டு நிலைக்கின்றன வல்ல வாகையா லென்க. ஒருகால் இன்ப முற்றவன் மற்றொருகால் துன்ப முறுதற்குத் தயாராகவேயிருத்தல் வேண்டும். எற்கு எக்காலும் இன்பமட்டுந்தான் வேண்டும், துன்பம் வேண்டா என்று ஒருவன் சொல்வது அறிவீனமும் கோழைத் தன்மையுமாகும்.

" இன்ப முண்டேல் துன்பமுண்டு
ஏழை மனை வாழ்க்கை''

என்ற பெரியோர் திருவாக்கும் ஈண்டு நோக்கத் தக்கது.

நம் ஆன்மா ஒரு பற்றுக்கோடுமின்றி எப்போதும் இயங்க ஆற்றலில்லாதது. அஃது எஞ்ஞான்றும் ஒன்றனைப் பற்றிக் கொண்டேதானிருக்கும். அறியாமையாகிய பெத்த நிலையில் அது மாயையைப் பற்றிக் கொண்டு அதுவேதாளுய் நிற்கின்றது. ஆனல் முத்திநிலையிலோ வென்றால் அது சிவபெருமானின் திருவடிகளையே தனக்குப் பற்றுக் கோடாக்கிக்கொண் டிருக்கின்றது. ஒன்றனைவிட்டு விட்டுச் சும்மா விராமல், உடனே மற்றொன்றைப் பற்றிக் கொள்ளும் நமது ஆன்மாவை, மற்றொரு பச்சிலையைப் பற்றிக் கொண்டே, தான் முன்னிருந்த பச்சிலையைவிட்டு நகரும் ஒரு புழுவுக்கு ஒப்பாகச் சொல்லலாம். நாம் எப்போதும் இன்பத்தினையே விழைகின்றோம். ஆனல் அவ்வின்பமோ வென்னில், நீரிற் குமிழி போன்று, தோன்றிச் சின்னாட் பிறகு மறைகின்றது. அப்போது நாம் துன்ப முழக்கின்றோம். ஆகவே நாம் இன்ப மென்று கொள்கின்றவையெல்லாம் இறுதியில் துன்பத்தையே



தருகின்றன. இதன்பொருட்டே குமரகுருபர அடிகள், தமக்குச் சுவர்க்காதி போகங்களும், இந்திரன், பிரமன், விஷ்ணு முதலியோரின் பதங்களும் இறைவன் அளித்தாலும், அவையெல்லாம் என்று மழியாத முடிந்த பேரின்பத்தை நல்குவனபோற் காட்டி, உடனே நம்மை மற்றோர்முறை அறியாமை என்னும் இருளில் அழுத்தும் நீர்மையனவாகலான் அவை வேண்டாவென வெறுப்பார்.

" ஆராவின்ப மென்றரும் பெயர் பெறினும்
வாராவல்வினை வருவிக் கும்மே''

என்று கூறி முடித்தார். ஆகையால் உண்மையிற் பேரின்பத்தை விரும்புவோர், தோன்றுவதுபோல் மறையும் இவ்வுலகவின்பத்தினை தமக்குப் பகையென வெறுத்துத் தள்ளுவர். இன்ப துன்பமென்னும் இவ்விரண்டையும் ஒரு பொருட் படுத்தாது, அவை தமக்கு நேருந்தோறும் அவற்றினை ஒரே படித்தாக நோக்குபவரே, சமநிலையென்னும் சீரிய தன்மையினை யடைந்த பெரியோராவர்.

இனி, இச்சமநிலையை எய்துதற்கு, நாம் பல்காலும் நமது மனதை ஒருமுகமாகத் திருப்ப முயலுதல் வேண்டும். நாம் நமது மனதைப் பல விடங்களிலும் செலுத்தி, பற்பல காரியங்களில் அதனைச் சிதறவிடுத்து அலைகின்றோம். ஒரு கணமேனும் நாம் ஒன்றைப் பற்றியேனும் நினைத்திராத கால மிருந்த தில்லை. ஒரு பொருளைப் பற்றி ஒருகால் நாம் நினைக்குங்கால் அதே காலத்தில் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல், பற்பல எண்ணங்கள் நம்மனதிற் புகுந்து போராடுகின்றன. இவற்றிற்கெல்லாம் நாம் இடங்கொடுத்து, இவற்றிற்கு அடிமையாகி ஒழுகுவோமானல், நாம் எக்காலத்துக் கடைத்தேறுவது? முக்காலுமில்லை. இத்தகைய இழிந்த நிலையினை யஞ்சியே நம் தாயுமானரும்,

" காடுங் கரையு மனக் குரங்கு
கால்விட் டோட அதன் பிறகே
ஓடுந் தொழிலாற் பய னுளதோ
ஒன்றாய்ப் பலவா யுயிர்க் குயிராய்
ஆடுங் கருணைப் பரஞ்சோதி
யருளைப் பெறுதற் கன்பு நிலை
தேடும் பருவம் இது கண்டீர்
சேர வாரும் செகத்தீரே''

என்று மனதைக் குரங்கின் தன்மைக்கு ஒப்பித்துக் காட்டினர்.

" பாழான என்மனம் குவியவொரு தந்திரம்
பண்ணுவ தனக் கருமையோ''

என்னு மடிகளில், எல்லாம் வல்ல இறைவர், தாம் தமது மனதை ஒருமுகப்படுத்த அருள்கின்றார் இல்லையென வருந்துகின்றார். இவ்வுலகத்தில் எத்தகைய சித்திகளையும், பேறுகளையும் எய்தலாம். ஆனல் நமது மனதை மட்டும் அடக்கி வைத்திருப்பது மிகவும் அரிது என்னுங் கருத்தையடக்கி,

" சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென் [வமே
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்
தேசோ மயா னந்தமே''

என்று அருளினர். இவ்வாறே பற்பல பெரியோர்களும் பற்பல காலங்களில், தம்மனத்தை யடக்க ஆற்றலிலராகி வருந்துகின்றனர்.

ஆகவே ஒரு பொருளின்மேல் பற்று வைத்தால் மட்டுமே, அதனைப் பெறுங்காலின்பமும், இழக்குங்கால் துன்பமும் எய்தப் பெறுகின்றோ மாகலின், அவ்விரண்டனையுந் தவிர்த்தற்கு, ஒரு பொருளின் மாட்டும் பற்று வையாதிருத்தலே சமநிலை யாகுமென வறிக.

இதனையே ஆசிரியர் திருவள்ளுவனாரும் அவாவறுத்தல் என்று கூறியுள்ளார். இச்சம நிலையினைப் பற்பல ஆசிரியர்கள் தம் நூற்களில், வேண்டுதல் வேண்டாமையிலாமை யெனவும், நடுவு நிலையெனவும், காய்த லுவத்தல்கள் அற்ற தன்மை எனவும், விருப்பு வெறுப்பற்ற நிலையெனவும் கூறுப. இத்தகைய நிலையினை யடைந்தோர்க்கு, யாவராலும் ஒரு இடுக்கண்ணும் செய்ய வியலாது. என்னை ? மற்றோர் செய்யும் இடுக்கண்களைப் பாராட்டி அவற்றால் துன்பமுறுதல் அவர்பாற் காணப்படாமையா னென்க.

அவர்கள் கற்கண்டு தின்று களிப்பதுமில்லை. வேம்பைத் தின்று முகஞ்சுளிப்பதுமில்லை. அவர்கள் உலகத்திலேயே இல்லறத்திலிருந்து மனைவி மக்களைப் பெற்று வாழ்வார்கள். ஆனால், தம்மோடு தொடர்புடைய அவர்கட்கு வரும் இன்ப துன்பங்களால் தாம் தாக்கப் பெறாத் தாமரையிலைத் தண்ணீர் துளி போன்றிருப்பார்கள். இக்கருத்தினை வலியுறுத்துதற் பொருட்டே,

“ எல்லாப் படியாலும்
  எண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்
  புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலினால்
  ஆங்கமல நீர்போல்
பிறிந் திருப்பார்
  பேசார் பிறர்க்கு ”

என அவ்வையாரும் அருளினர். அப்பெரியோர், தாம் ஒருவரை மதிப்பதில்லை; பிறர் தம்மை மதிப்பரென்று எதிர் பார்ப்பதுமில்லை. தன்னுடம்பின் மேல் பற்று வைத்த ஒருவனே, அதற்குப் பிறர் ஏதஞ்செய்யா வண்ணம், பிறருடைய உதவியை நாடுவான். அற்றன்றி, ஒரு பற்றுக்கோடுமில்லாத ஒருவனுக்கு எவ்வாற்றால், யாரால், துன்பமாவது, இன்பமாவது செய்ய இயலும்? யாம் சிறிது சிறிதாக, நம் மனைவிமக்கள் மாட்டும், மற்ற உலகப் பொருட்கண் மாட்டுமுள்ள பற்றினை நீக்க முயற்சித்தால், அவ்வளவுக் கவ்வளவு நாம் பேரின்ப ஞான நிலையினை யனுபவவராவோம். இதனையே, நம் தெய்வப் புலவரும்,

“ யாதெனின் யாதெனின் நீங்கியான்
  அதனின் அதனின் இலன் ” [கோதல்

என்று சாமானிய மக்களுக்கும் பயன்படும்பொருட்டு, மிக இலேசில் அவர்களும், இவ்வொழுக்கத்தை வழக்கத்தின் கீழ்க்கொண்டு வருவதற்கிசைய நயம்பட உரைத்தார். இன்றியமையாதெனப் பல பொருள்களைக் கொண்டிருக்கிற நாம், அவைகளை ஒவ்வொன்றாகப் படிப்படியாக நம்மிடத்தினின்றும் நீக்குவதே, அவாவறுத்தற்குச் செய்ய வேண்டிய முயற்சியாம். யாம் பற்பலவற்றை இன்றியமையாதன (Necessaries) வென்று கருதுகின்றோம். எமக்கு மிக்குள்ள செல்வத்தால் யாம் வேண்டப்படுவன அல்லவற்றை மிகவும் விழைந்து பெறுகின்றோம். அவைகளில் ஒன்று குறையினும் எமக்கு உடம்பு நிலை கெட்டு, இரவில் தூக்கம் பிடிக்காது. யாம் பஞ்சணை மெத்தையில், மெதுவான தலையணையில் தலை சாய்த்துத்தான் படுப்போம். ஆனால் யாம் வெளியூர்களுக்குச் சென்று பார்க்கும் போது, நமக்கு நம் இல்லத்தில் இருந்த துப்புரவுகள் ஒன்றேனும் இல்லாமையைக்குறித்து வருந்தினேம்; பஞ்சணையிற்படுத்த எம்முடம்பு, கல்திண்ணையில் படுக்க உடன்படுகின் றிலது. ஆதலால் எமக்கு இரவெல்லாம் தூக்கம் பிடிக்கவில்லை. அவ்வாறு விழித்துக்கொண்டு பார்க்கையில எம்மருங்கு, பகலெல்லாம் நன்றாய் உழைத்துச் சிறிது கஞ்சி மாத்திரமே குடித்த ஒரு கூலியாள் நன்றாய் குறட்டை விட்டுத் தூங்குவதைக் கண்டு அவன் மாட்டு அழுக்காறு கொண்டேம். எம்மைவிட அவன் முத்தி நிலைக்கு அணுகி யிருப்பதாக எமக்குத் தோன்றிற்று. எமக்கு அளவிறந்த செல்வ மிருந்தும், யாம் அச்செல்வத்தாலேயே துன்ப முறுகின்றேம். அன்று முதல் யாமும் அவனைப்போல எளிய வாழ்வைப் பயிற்சிக்க ஆரம்பித்துவிட்டேம். முதன்முதல் தலையணை யின்றிப் படுக்க வழக்கஞ் செய்து விட்டேம். அன்று முதல் எங்குச்சென்றாலும், தலையணை யில்லா விடினும் எமக்கு அதைப் பற்றிக் கவலை யில்லை. ஆகவே, ஒன்றினிடத்து எமக்கிருந்த பற்று நீங்கவே அதன் தொடர்பாகிய துன்பம் எம்மை விட்டு நீங்கிற்று. முத்திநிலையினை ஒரு சிறிது அண்மினேம். இவ்வாறே படிப்படியாக ஒவ்வொரு பொருளிடத்தும் நம் பற்றினை நீக்குவோமானால், முடிவிலே சமநிலையென்னும் தன்மையை யடைவோம். எக்கணத்தில் யாம் எம் பற்றுக்களை யெல்லாம் விட்டொழித்தோமோ அக்கணமே யாம் முத்தி நிலையினைக் கைவரப் பெற்றோம் என்னும் கருத்தினையே திருவள்ளுவர்,

“ ஆரா வியற்கை யவாநீப்பின் அந்நிலையே
  பேரா வியற்கை தரும் ”

என்னும் தமது குறுவெண்பாட்டில் வலியுறுத்துகின்றார்.

“ ஆசா நிகளம் துகளா யினபின்
  பேசா வனுபூ திபிறந் ததுவே ”

என்னும் அருணகிரிநாதரது, கந்தரனுபூதி யடிகளும்,

“ அற்றது பற்றெனின் உற்றது வீடு ”

என்னும் முதுமொழியும், மேற்போந்த கூற்றினையே நன்கு விளக்கும்.

“ துறவிக்கு வேந்தன் துரும்பு ”

என்றபடி இச்சம நிலையினை யடைந்தோர், முடியுடை வேந்தர் மூவர் வரினும் அவர்கட்கு அஞ்சுவதில்லை. தன்னைப் பிறர் பார்த்து மதிக்கவேண்டுமென்னும் கருத்துடைய பேதை மகனொருவன், தன்னை நன்கு ஆடையணிகலன்களாற் புனைந்துகொண்டு பிறர் தன்னைப் பார்த்து அதிசயிக்கின்றார்களோவென மிகவும் ஆர்வத்தோடு, தான் வருவதை எல்லாரும் அறியும்படி ஓசையெழ நடந்து காட்டி, தன் ஆடை அணிகள் அவர்கட் கெல்லாம் நன்கு புலனாகும்படி சுற்று முற்றும் பார்த்து வருகின்றான். இவனைப் போல மற்றுமுள்ள பேதை மக்கள் இவனைக்கண்டு பெருமூச் செறிந்து அலக்கணுழக்கின்றார்கள். முற்போந்த பேதையும், தன்னைப் பலர் பார்த்துப் பேசிக் கொள்கின்றார்களென்று, முன்னிலும் பன்மடங் கதிகமாகப் பெருமிதமூர்ந்த நடையுடன் செல்கிறான். அவ்வாறிவன் செல்லும்போது, வழியில் ஒரு துறவி கண்களை மூடிக்கொண்டு இவனைச் , சட்டை செய்யாது வாளா வீற்றிருந்தனர். உடனே இவன் மனம் துணுக்குற்றது. “என்னை, என் பேரொழிலையும் என் ஆடை அணிகளின் விலை மதிப்பையும் கண்டு வியப்புறாதார் யாரு மில்லையா யிருக்கக் கிழிந்த கந்தைக்கும் கதியில்லாத, இவ்வேழை மகன் என்னைப் பார்த்து வாளா விருக்கின்றான்” என்று தன் மனத்துள் நினைத்துக்கொண்டு, அத்துறவியினருகு சென்று “ ஏ, ஏ, கீழ் மகனே, என்னை ஏன் அசட்டை செய்தாய் ?” என்று வினவினன். அதற்கு அத்துறவி வாய் வாளாது குலுக்கென நகைத்தார். அத்துறவிக்கு எவர் எப்படியிருந்தும் ஆவதென் ? அவருக்குப் பிற

ரைக்கண்டு காய்தல் உவத்தல் இல்லை. பிறர் தம் காய்தல் உவத்தலும் அவர் தம்மை யொன்றுஞ் செய்யா. அவர்கட்கு வெயிலும், மழையும், இனிப்பும், கசப்பும், பாலும், நஞ்சும், மண்ணும், பெண்ணும் யாவும் ஒன்றே. அவரே தம் மனத்தை ஒரு வழி நிறுத்திய பெரியார்,

"வேண்டுதல் வேண்டாமை இலானடி [சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்றபடி அவர்கள் 'அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவது மில்லை.' உலகப் பற்றினை யெல்லாம் ஒழித்து, இறைவனுடைய ஒரு பற்றினையே உறுதியாகப் பற்றின அவர்கள், நமக்கெல்லாம்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றும்,

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்
சார்தரா சார்தரு நோய்" [மற்றழித்துச்

என்றும் நல்லறிவு புகட்டுகின்றனர். மாணிக்க வாசகர் முதலிய சமயாசிரியர்களும் பட்டினத் தடிகள், தாயுமானவர் முதலிய மற்றும் பலரும் இச்சீரிய நிலையின் நின்றவர்களென்பது அவர் தம் பாக்களைப் பயில்வோர்க்குத் தெள்ளிதிற் புலனுவதாம். மிகப் பண்டை நாட்களில் கிரீஸ் (Greece) நாட்டில் (Socretes) சாக்ரடீஸ் என்னுமொரு பெரும்புலவர் இருந்தார். அவர் தம்காலத்து மக்களது பேதைமைக் கிரங்கி, அவர்தம் மூடக் கொள்கைகளை வெறுத்து, அவர்கள் வழிபடும் கடவுளர்கள், உண்மைக் கடவுளர்களல்லரென்றும் வாய்விட்டுக் கூறினர். ஆனால் "அல்லாத மாந்தர்க் கறங் கூற்றம்" என்பதுபோல அக்காலத்து மக்கள் அவர் தம் விழுமிய அறிவுரைகளைப் பாராட்டினர்களில்லை. இத்தகைய புதிய கொள்கைகளை யவரெங்கும் பரப்பி நாட்டிற்குத் தீமை விளைத்தனரென்று பிறழ நினைத்து, அவர் தம்மைச் சிறையிலடைத்துக் கொல்லவே துணிந்து விட்டார்கள். ஸாக்ரடீஸின் ஆருயிர் நட்பினர் பலரும் அவர்பாற் சென்று அவர் தம்மைத் தப்பிப் பிழைக்குமாறு சொன்னர்கள். தம்முடம்பின் மேல் ஒரு சிறிதும் பற்று வையாத அப்பெரியார், நிலை பேறுடையனவாகிய உண்மைகளை நெகிழவிட்டு, அழிதன் மாலையதாகிய உடம்பை ஒருகாலும் காப்பாற்ற இசையேன் என்று துணிந்து, இறுதியில், அந்தோ! தம்பகைவர்கள் கொடுத்த நஞ்சைப் பால்போலருந்தி நகைமுகத்துடன் உயிர் துறந்தார். அப்பேதை மக்களின் நாப்பண் தாம் இருப்பது தகுதியற்றதென அவர் நினைத்தனர் போலும்.

மேற்போந்த கிரீஸ் நாட்டிலேயே, கிறிஸ்து பிறப்பதற்கு முன் மூன்றும் நூற்றாண்டில், உலக முழுதும் ஒரு குடைக்கீழ் ஆண்ட அலெக்ஸாண்டர் (Alexander) என்னும் மாஸிடோனியா (Macedonia) நாட்டுப் பெரும் போர் வீரருக்கு, யாவரும் அஞ்சி, நடுங்கிக் கீழ்ப்படிந்து வந்தார்கள். ஆனால் டயோஜினிஸ் (Diogenes) என்பவர் மட்டும் அவ்வாசனை மதிப்ப தில்லை. ஒரு பகல் அலெக்ஸாண்டர் டயோஜினிஸை தன்னிடம் அழைத்து வரும்படி ஒரு ஆளனுப்பினர். அதற்கு அப்புலவர் அரசனணையைச் சிறிதும் பாராட்டாமல், அவ்வேவலாளனிடமே அரசன் தன்னை வந்து பார்க்கும்படி சொல்லி யனுப்பிவிட்டார். இம்மறுமொழியைக் கேட்ட அரசன் வியப்பும் நகைப்புங்கொண்டு அவ்வாறே தான் அவரிடம் போந்தான். போந்தவன், வெய்யிலிற் காய்ந்துகொண்டிருந்த அப்புலவர்க்கும், ஞாயிற்றுக்கும் நடுவே சென்று, தன்னுடம்பின் நீழல் அவர் மேல் படும்படி, ஞாயிற்றை மறைத்துக் கொண்டு நின்றான்.

(தொடரும்)

187/19
Chennai-600 005.